1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

77-ம் புத்தகம் 3-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு தைமாதம் 24-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## தவறை ஒப்புக்கொண்டால்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இந்தத்தவறை அவர் ஒப்புக்கொண்டதால் எத்தனையோ லட்சம்பேர்கள் இதன் உண்மையை உணர்ந்தார்கள். ஜேர்மனிநாட்டிலிருந்து துரத்தப்பட்டதும் அமெரிக்க நாட்டில் குடியேறினார். ஜேர்மனி இவர் கண்டுபிடித்தவைகளை இன்னொரு ஜேர்மன் விஞ்ஞானி கண்டுபிடித்தான் என்று கூறியது. தற்சமயம் அவர்: "நான் யேசுவைத் துதிப்பதிலேயே இன்பம் காண்கிறேன்" என்கிறார்.

இதோ! நமது ஆண்டவர் ஓர் அழகிய சிறுஉவமையைக் கூறுகிறார். அது என் உள்ளத்தை நைந்துருகச்செய்கிறது. தனவந்தன் ஒருவனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். இளையவன் தன் தந்தையிடம் தனக்குச் சேரவேண்டிய பாகத்தைக் கேட்டான். அவர் எவ்வளவு சொல்லியும், இவன் கேட்டபாடில்லை. தன் பாகத்தைப்பெற்றுக்கொண்டு அயல்நாடுகளில் விரயம் செய்தான். வாழ வழியின்றிப் பன்றிகள் தின்னும் தவிட்டைத்தின்று காலம்கழித்தான். அப்போது அவன்: "என் தகப்பனாரிடத்தில் வேலைசெய்பவர்களே என்னைவிட நல்லநிலையில் இருப்பார்களே. அவர்களைவிடக்கேவலமானவன் ஆகிவிட்டேன். இருப்பினும், நான் என் தந்தையிடம் போய், என் தவறைஒப்புக் கொள்வேன். "நான் உம்முடைய குமாரன் என்று சொல்லிக்கொள்ளவே அருகதையற்றவன்; என்னை உம்முடைய வேலையாட்களில் ஒருவனாகச் சேர்த்துக்கொள்ளும் என்பேன்" என்று நினைத்து, தன் தந்தையின் ஊருக்கு வழி நடந்தான்.

மேல்மாடியிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த தந்தை அவனுடைய வரவைக்கண்டு, உள்ளம உருகி, ஓடிப்போய், அணைத்துக்கொண்டார். அவனும அவரிடத்தில், "என்னை உம்முடைய வேலையாளாக நியமித்துக்கொள்ளும். நான் உமது குமாரன் என்று சொல்லிக் கொள்ளக்கூடத் தகுதியற்றவன்" என்றான். தந்தையோ அதைக்கவனியாமல் அவனை உச்சிமோந்து, அவனுக்கு நல்லாடை உடுப்பித்து, ஒரு கொழுத்தகன்றுக்குட்டியையும் அவனுக்குச்சமைத்துக் கொடுக்கும்படி ஈந்து, "காணமற்போன என்மகனைக் கண்டேன்" என்று சொல்லுகிறார். தவறை உணர்ந்த ஊதாரிப்பிள்ளை ஏன் நல்லநிலையை அடைந்தான். தவறை ஒப்புக்கொண்ட தனயனுக்காக அவனுடைய தந்தை, அவன் தமையனிடத்தில்கூட அவனுக்காகப் பரிந்து பேசினார் என்றால், அதன் நேர்மையை என்னென்பது?

பெஞ்சமின் பிராங்க்லின் (Benjamin Franklin) வாழ்க்கைச் சரிதத்தில் ஒருசம்பவம் எனக்கு ஞாபகம்வருகிறது. ஒருநாள் அவருடையநண்பன் அவரிடம் வந்து: "பெஞ்சமின், உன்னைத் திருத்தவே முடியாது. நீ உன்னைப் பெருமையாக நினைத்துக் கொள்ளுகிறாய். உன்னுடன் ஒத்துக்கொள்ளாதவர்களைக் கேவலமாகப்பேசுகிறாய். ஆகையால், உன் சிநேகிதர்கள், நீ இல்லாவிட்டால்தான் சந்தோஷமாயிருக்கிறார்கள்" என்றான்.

அ. பெஞ்சமின், B. Sc. (Hons.)

பெஞ்சமின் அதை உடனே உணர்ந்தார். தமது தவறை அப்போதுதான் நன்றாக ஆலோசித்துப்பார்த்தார். அதற்குப்பிறகு அவர்பேசும்போது வெகுசாதுவாக மாறிவிட்டார். ஏதாவது எதிர்த்துப் பேசவேண்டியசந்தர்ப்பம் ஏற்பட்டால், "நான் இப்படிநினைக்கிறேன், ஒருவேளை தவறாயிருக்கலாம்...." என்பாராம். "நான், எனக்குஎவ்வளவுதான் உண்மையென்று தெரிந்தாலும் அதைச் 'சந்தேகமில்லாமல் நிச்சயமாய் இதுஇப்படித்தான்' என்ற பதங்களை விட்டுவிட்டேன்" என்று தம்சரிதத்தில் கூறுகிறார். இதனால்தான் அவர் அநேக நண்பர்களைப் பெற்றார். அவருடன்பேசுவதே அவர்களுக்குப் பாக்கியமாகவிருந்ததாம்.

மேற்றிராணியார் ஒருவர் ஒருபுத்தகம் எழுதினார். அதில் அவர் சிலவேதவிஷயங்களைத் தமது அபிப்பிராயப்படி எழுதியிருந்தார். அந்தப் புத்தகம் வெகுசீக்கிரத்தில் விலையாகியது ஆனால், பாப்பானவர் அதற்குப் "படிக்கக்கூடாது" என்ற தடை உத்தரவு பிறப்பித்தார்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## எமது பாத்திமா யாத்திரை

(சென்றவாரத் தொடர்ச்சி)

சிஸ்றர் லூசியாவின் மருகரான ஓர் இளங்குருவானவர் க்ஷயரோகம்கண்டு வருந்துகின்றார். அவருக்கர்கமன்றாடும்படி சிஸ்றர் லூசியா கேட்கப்படும்போது, அவள்கொடுக்கும் ஒரேயொரு மறுமொழி யாதெனில், "செபமாலை சொல்லிவா" என்பதே என்று தெரியவருகிறது. பாத்திமாவில் எங்கெங்குமே செபமாலை சொல்லப்படுகிறது. எங்கெங்கும் செபமாலை ஓசையாகவே இருக்கின்றது. ஒபோட்ரோ நகருக்குப்போய்த் திரும்பியவழிமுழுவதும் டக்றர் லூயிஸ் சலேஸ்அவர்கள் நம்முடன்வந்திருந்தார். அப்போதெல்லாம் அவர் திரும்பத் திரும்ப ஆங்கிலத்தில் செபமாலை சொல்லத் தொடங்கி விடுவார். போர்த்துக்காலில் நடத்தும் நீண்ட பிரயாணங்களின்போது வழமையாக நடைபெறுவது போன்று, நாமும் அவருடன் சேர்ந்து செபமாலைசொல்ல வேண்டியவர்களானோம். அற்ப சொற்ப சம்பாஷணையே வழியில்நடைபெற்றது. ஏதும் சில விஷயங்களைப்பற்றி இரண்டொருநிமிஷம் பேசியதும் "சரி இனிச் செபமாலையைத் தொடக்குவோமா?" என்று சொல்லித் தொடங்கிவிடுவார். செபமாலையாலே உலகம் காப்பாற்றப்படுமென்ற திடநம்பிக்கை அங்கேஉறுதியாகநிலவுகின்றது. பாத்திமாபதியிற் போன்று செபமாலையின் மூலமாகத் தேவதாயாரை அத்துணைபெரும் வேகமானபற்றுதலுடன் பக்திபண்ணுவது, உலகில் அநேகமாக வேறெங்குமே இல்லை.

ஜசிந்தாவுடையவும், பிரான்சிசுடையவும் பெற்றோருடன் சேர்த்து நாம் பிரதிமைப்படம் பிடிக்கப்படும் பேரகிர்ஷ்டத்தைப் பெற்றுக்கொள்ளலானோம். 79 வயசுடைய அந்த விருத்தாப்பிய மனிதரும், 82 வயசுடைய அந்தவயோதிக மாதும் ஒருசிறுமனையில் வசிக்கின்றனர். இந்தமனையோ சகலத்திலும் அதிகம் வறுமையின் கோலமாகவே காட்சியளிக்கின்றது. இவர்கள் தமதுமனையைச் சூழவரச் சிறு காய்கனித் தோட்டநிலம் ஒன்றைக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சில மைல் தூரத்துக்கப்பால் சிறிய கமம்ஒன்றும் இவர்களுக்குண்டு. தங்களுக்குச் சொந்தமான ஓர் கழுதையின்மேல் அங்குபயணம் செய்கின்றனர். அவர்கள்மனையில் ஒரேயொரு விளக்குத்தான் இருக்கிறது. அது திரிகளுடன் கூடியதாய், இங்குள்ள அதே விளக்குகளைஒத்ததாய் ஒலிவ் எண்ணெய்கொண்டு எரிக்கப்படுகிறது. சூழவர முழுஇடமும் ஆடம்பரமோ, அலங்காரகாட்சியோ யாதுமின்றியே சாதாரணமாகவே காணப்படுகிறது. மறுபிள்ளைகள் விவாகஞ்செய்துகொண்டு வேறுவேறான இல்லங்களிற்போய்ச் சஞ்சரிக்கின்றமையால் இந்த வயோதிக மாதே தனக்கும், தனதுநாயகருக்கும்வேண்டிய சமையல் வேலையைச் செய்துகொள்ளுகின்றாள். மனையின்கதவு அத்துணைபதிவாய் இருப்பதாலே அதனுள் பிரவேசிக்கும் ஒருவர் நன்றாய்க்குனிந்துபோக வேண்டியவராகின்றார். அந்த மனை

ஸ்ரீமதி எதெல்றியா காசிச்சிற்றி

இரண்டு சிறிய அறைகளையும், ஒருஅடுக்களையையும் அடக்கியுள்ளது. ஆனால், எங்கும் மனப்பாக்கியமும், சமாதானமும், வழமைக்குமாறான அன்பும், தயையும் காணப்படுகின்றன.

ஜசிந்தாவுடையவும், பிரான்சிசுடையவும் பெற்றோரால் மிகுந்தபட்சத்துடன் நாங்கள் உபசரிக்கப்பெற்றோம். நாங்கள் சிலகாரியங்களை விசாரித்தபோது, அவர்கள் அவற்றை விளங்கிக்கொள்ள முடியாதவர்களாயும், தேவதாயாரது பெரும்காட்சிகளுக்கும், வெளிப்படுத்துதல்களுக்கும் கருவிகளாகச் சர்வேசுரன் தங்கள் பிள்ளைகளை ஏனோ தெரிந்துகொள்ள வேண்டுமென்பது பற்றி இன்னமுமே ஆச்சரியத்தால் நிரப்பப்பட்டவர்களாயும் இருக்கக்கண்டோம். அந்த இரு விருத்தாப்பியதம்பதிகளுக்கும் கொடுக்கப்படுகின்ற எந்த நன்கொடைப்பணமும் தங்களைச் சுற்றிவரவிருக்கும் வறிய சனங்களுக்கு அவர்களால் பகிர்ந்து கொடுக்கப்படுவது. அப்பகுதிமுழுவதிலும் நன்கறி

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனந்தீர்ந்த கூனற்சைமன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

அம்மையார் :– நல்லது சைமன், உனதுபாட்டனுர் கூறியபடியே வாக்குப்பண்ணப்பட்ட மெசியாவின்வருகை மிகமிகஅண்மிவிட்டது. நானும் அவரை விரைவில், சிலவேளை இவ்விரவில்தானே காணுவேன்போல் இருக்கிறது. உன்னைப்போலவே நானும் அவர்வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

சைமன் :– (அங்கலாய்ப்புடன்) அம்மா! தாங்கள் உண்மையில் அந்தஆண்டவனைக் காணப்போகின்றீர்களா? அப்படியானுல், தாங்கள்நிச்சயமாக ஓர் இராணியாய் இருக்கவேண்டும்; ஏனெனில், வாக்குப்பண்ணப்பட்ட மெசியா அரசமாளிகையிலே பிறப்பார்; பெரியோர்கள்மத்தியிலே வசிப்பார் என்பதாக எனதுபாட்டனுர் எடுத்துக்கூறியிருக்கிருர்.

அம்மையார் :– அல்ல, அல்ல, சைமன்! என்னை ஒருஇராணியாக எண்ணிக்கொள்ளாதே. வீண்தீர்மானம் பண்ணிக்கொள்ளாதே. என்னை ஆண்டவனின் சின்னப்பணிப்பெண் (அடிமை) என்றே அறியக்கடவாய்.

இதைக்கேட்டுக்கொண்டு அம்மையாருடன்வந்த காவலர் தமதுஉள்ளத்திலே "அம்மையார் ஆண்டவனின் அடிமையாம்; அவ்வாருயின் நான் அடிமைக்கு அடிமையல்லவோ" என்று எண்ணிக்கொண்டார். அவ்வேளை தான்செய்வது, சொல்வது யாதென அறியாதுவிழித்த சைமன் சிறிதுதெளிவடைந்து சொல்லுகின்ருன்.

சைமன் :– அம்மா! தாங்கள் மெசியாவின்வருகை அதிகம் சமீபித்துவிட்டதாகக் கூறினீர்களே. அப்படியானுல் அவாதுவருகையாலே எனது இந்தக்கூனல்முதுகு குணமாகுமென்று நான் திண்ணமாகவே எதிர்பார்க்கின்றேன். அவர் சர்வவல்லபம் உள்ளவரென்றும், அவரால்செய்ய இயலாதது உலகில்ஒன்றுமே இல்லையென்றும், அவரை என்கண்களால் காண்பேனென்றும் நம்பிக்கையாக இருக்கின்றேன் அம்மா.

அம்மையார் : உண்மை. உண்மை. சைமன் நீ சொல்லியயாவும் உண்மை. உன்விசுவாசத்தைக் கைவிடாதே; உனது திடநம்பிக்கை வீண்போகமாட்டாது.

இவ்வாறே அவர்கள் பலவும் பேசிக்கொண்டே பயணத்தை நடத்தினுர்கள். கடைசியாக நகரை அடைந்துவிட்டார்கள். எங்கும் இருள் கவியத்தொடங்குகின்றது. கிழவனுரும், சைமனும் தங்கள் இனத்தவர் இல்லம் தேடிச்சென்றதால், தங்கள் பிரயாண நண்பர்களைப் பிரியவேண்டியதாயிற்று. அம்மையாரும், அவாது துணைவரும் உறவினர்உதவி கிட்டாமையால் தங்கு சத்திரங்களைத் தேடநேர்ந்தது.

ஆனுல், என்செய்வது? அம்மையாருக்கும், அவர் துணைவருக்கும் சத்திரங்கள்தானும் இடந்தருவனவாய்க் காணவில்லை. எங்குசென்ருலும் ஆங்கெல்லாம் "இங்குஇடமில்லை, இடமில்லை" என்னும் சங்கநாதமும், சங்கையீனமுமல்லாது, இடங்கிடைக்குமென்ற நம்பிக்கைக்கோ இடமில்லை. தரித்திரகோலத்தோடு தெருத்தெருவாகஅலைந்து இடந்தேடும் இவர்களைக் கண்டவர்களிலே சிரிப்பாரும், பரிகசிப்பாருமல்லாது இன்சொல்வழங்கி ஆறுதல்அளிப்பார் எவரும்இல்லை. துணைச் செல்லும் ஆடவருக்கோ சஞ்சலமுண்டாக, தம்முளே உரைப்பார்: "யான் வருந்தினும் காரியமில்லை; ஆனுல், என்னைநம்பிவந்த இக்கன்னிகை வருந்துவான்ஏனே? இவ்விதம் வருந்தவிடுதல் தகுமோ? எனக்கிது அடுமோ" என நினைந்துநினைந்து வருந்துகின்ருர்.

குறிப்பறிந்துஒழுகும் குணம்படைத்த அம்மையார் அவர் நிலையைஉணர்ந்து கூறுவார்: "நாங்கள் அப்பாற் செல்வோம்; சிலபோது நகரின்புறத்தே எங்களுக்கு ஓர்இல்லிடத்தின் சில்லிடமாவது கிடைக்கினுங்கிடைக்கும்." இவ்வாறு சொல்லிக்கொண்டு இருபேரும் குன்றுகள்சூழ்ந்துள்ள நகர்ப்புறஞ்சென்ருர்கள். ஆங்கு மாடாடுறையும் ஒரு குகையினைக் கண்டார்கள். இரவு தங்குவதற்கு இடம் அதுவேயெனக் கண்டுகொண்டார்கள்.

இக்குகையிடத்தேதான் அர்த்தசாமத்தே பளிங்கினை ஊடுருவிச் செல்லும் ஒளிப்பிளம்பினைஒப்ப மூப்போதும் கன்னித்தாயாகிய மரியாயின் திருஉதரத்திருந்து வாக்குப்பண்ணப்பட்ட மெசியாவாகிய தேவகுமாரன் அற்புதமாகப் பிறந்தார். இயற்கையே பிரமிக்க இருளில் ஒளியாய், இன்னலில் இன்பமாய், கெட்டழிந்த உலகிற்குச் சமாதானசுபசெய்தி கொண்டுவந்தார், தேவஇராசகுழந்தை.

அவ்வாருக, அங்கே ஒசியஸ் என்பவரின் உறவினர்இல்லத்திலே ஒருசிறு அறையில் கூனற்சைமன் வெப்பந்தரும் போர்வைகளால் இறுகமூடிக்கொண்டு படுக்கையில் கிடந்தபோதிலும் அவனுக்குத் தூக்கமோவாவில்லை. தனது பயணக்களை இன்னுமே தீராதவனுய்க் கூனல்முதுகு வருத்த, வெகுவாக வாதைப்படும்போது என்ன ஆச்சரியம்! தன் தலைக்குமேலாக, வானவெளியிலே, விண்மீனகளின் ஒளியிலே திவ்வியகீத நாதங்களைக் கேட்கின்ருன். தனது கூனல்முதுகு இடந்தரும் அளவிற்கு விரைவாகக் குதித்துஎழுகின்ருன். தன்னைச்சுற்றிய போர்வைகளையெல்லாம் இழுத்தெறிகின்ருன். வெளியே சென்று தனது செவிப்படும் உந்நதமானகீதங்கள் எங்கிருந்து வருகின்றன என்பதை அறிந்துகொள்ள ஆசிக்கின்ருன். தேவதூதர் ஒன்றுகூடி மனோகரமாகப்பாடும் இசை இன்பவெள்ளத்தில் மூழ்குகின்ருன். கூனல் முதுகு தடுக்கத்தடுக்க, இசைவரும் திசையைக் கண்கொண்டு நாடுகின்ருன். நவகணதூதர்கள் தேவலோகம் விட்டுப் பூலோகம்புகுந்து, முகிலெனத் திரண்டு, ஆகாயவெளியில்மிதந்து குன்றுகளைநோக்கிச் செல்லுகின்றனரோவென எங்கும் தனதுஇருவிழிகொண்டு தேடுகின்ருன். கடைசியாக ஆச்சரியத்தோடும், மிக்கபீதியோடும் இசை இன்பத்திற் சொக்கியவனுய் வானத்தை நோக்குகின்ருன். நோக்கவே, "உந்நத ஸ்தலங்களிலே சருவேசுரனுக்கு மகிமைப்பிரதாபமும்..." என்று தேவஇராசகுழந்தையைப்பாடும் உந்நதகீதம் அவன் செவிகளில் தெளிவாகவிழுந்தது. அவன் இதயத்திலே அன்பு பொங்கி எழுந்தது. தானும் அந்தவான தூதருடன் சேர்ந்து அத்தேவபுகழைப் பாடும்படியாக அவன்உள்ளம் அவனைத்தூண்டியது. தூண்டவே, தானும் கூடிப்பாடி ஆனந்தநிர்த்தம் செய்கிருன்.

கூனல்முதுகு தாளம்போடப்போடப் பாடிப்பாடித் தானும் பறந்துபறந்து வானவர்கூட்டத்தோடு குன்றுகள்மீது சென்ருலோவென்ற ஆசைமேலிட்டவனுய்த் தன்னையேமறந்து நிற்கும்போது, என்ன அதிசயம்! அவன்கண்கள் குன்றுகளையும் ஊடுருவிப் பார்க்கின்றன. மண்ணே மாமோ எதுவும் அவன் கண்ணெளிக்குத் தடையாயில்லை. அவன் பார்வை திருக்குகைசென்றது. அங்கே புல்லணையிற்படுத்து—அறிவுத்துயில் கொள்ளும் தேவகுழந்தையைத் தான் நின்றஇடத்திருந்தே தனது கண்குளிரச் சைமன்கண்டான். கண்டதும், "புதுமை புதுமை! இதோ எங்கள் தேவன்" என நாவிட்டுப் பன்னூறுமுறை ஆர்ப்பரித்தான். அத்தேவகுழந்தையின் அக்கமும்பக்கமும் அன்னையாரும், ஓர் முனிவரும் முழந்தாளிட்டு, இருகரங்கூப்பி இறைஞ்சிநிற்கக்கண்டான். [illegible]

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# சுதேச வர்த்தமானம்

## கத்தோலிக்க ஐக்கியசங்கம்

இலங்கைக் கத்தோலிக்க ஐக்கிய மத்தியசங்கமானது சமீபத்திலேகூடியபோது, அதன் புதியஉத்தியோகஸ்தர்கள் பின்வருமாறு தெரிவுசெய்யப்பெற்றிருக்கிருர்கள். தலைவர்—புரொபெசர் டபிள்யு. ஏ. ஈ. கருணாரத்தின. உபதலைவர்: சேர் எட்வாட் ஐயதிலக. கௌரவசெயலாளர்—டக்றர் சி. ஜே. சி. டி சில்வா. கௌரவதனுதிகாரி—டக்றர் சி. டி. மடப்புளி. இலங்கைக் கத்தோலிக்கஐக்கியசங்கத்தின் பொன்யூபிலிவிழா இவ்வருடம் வருகின்றமையாலே கொழும்பிலே ஓர்கத்தோலிக்க மகாநாட்டுடன் அதைக்கொண்டாட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதற்குத்தகுந்த ஏற்பாடுகளைச்செய்து மத்தியசங்கத்துக்கு அறிக்கையிடுமாறு சேர் எட்வாட் ஐயதிலகஅவர்கள் தலைமையில் ஓர்கம்மிற்றி ஏலவேநியமிக்கப்பட்டிருக்கிறது.

## "லோறென்ஸ் வில்லா"

சென்ற நூற்ருண்டிலே செல்வவந்தரான குலமகன்ஒருவர் கொழும்பிலே வெள்ளவத்தையில் இருந்த ஓர் மனையை விலைகொடுத்து வாங்கி அதற்கு "லோறென்ஸ் வில்லா" என்று நாமம் இடலாயினர். 1900-ம் ஆண்டு திருமதி ஜெனெற் பூலியர் எனும் மாது இந்தமனையிலே ஓர்பாடசாலையைத் திறந்தார். இது மிகவும் முன்னேற்றம் அடையலாயிற்று. அப்போது இந்தப்பாடசாலைக்கு என்ன பெயர் கொடுப்பது என்ற கேள்வி எழலாயிற்று. அத்தருணம் அகஸ்மாத்தாக அந்த மாது தியாக்கோனும், வேதசாட்சியுமான அர்ச். லோறெஞ்சியாரின் சீவிய சரிதையை வாசிக்கும்படியான சந்தர்ப்பங் கிடைத்து, அவர் ஓர் மெதடிஸ்சபைப் புரொட்டஸ்தாந்தாய் இருந்த போதிலும் தனது பாடசாலைக்கு "சென் லோறென்ஸ் பாடசாலை" யென்று நாமம் இடலாயினர். நிற்க, 1938-ம் ஆண்டுகத்தோலிக்க அதிகாரிகள் வெள்ளவத்தையிலே சென்லோறென்ஸ் பாடசாலைக்கு அருகாமையிலே, அப்பாடசாலைஒன்று இருக்கிறதென்பதைப்பற்றி யாதொன்றும் அறியாதவர்களாய், கொழும்புநகரின் முதற்பாதுகாவலரின் ஞாபகார்த்தமாக அதே சென் லோறென்சுக்கு அதாவது அர்ச். லோறெஞ்சியாருக்கு மகிமையாக அவர் பேரால் ஓர் கோவிலைக் கட்டினுர்கள். அதன்மேல் இற்றைக்கு ஆறுமாதங்களின் முன்னர் மற்ருேர் முக்கியசம்பவம் நிகழலாயிற்று. அதாவது அர்ச். லோறெஞ்சியாரின் விசாரணைப் பங்கிலே ஓர்கத்தோலிக்கபாடசாலையை அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. அப்போது அங்கே ஓர்பாடசாலைக் கட்டடம் விற்பனைக்கிருப்பதாக அறியவந்து அர்ச். லோறெஞ்சியாரின் பாடசாலை விலைக்குவாங்கபபடலாயிற்று.

## தொழிற்கட்சியும் அரசியலும்

இலங்கைத் தொழிற்கட்சியின் தலைவரான திரு. ஏ. ஈ. குணசிங்க அவர்கள் சென்றசனிக்கிழமை கொழும்புநகரமண்டபத்தில் நிகழ்ந்த தொழிற்கட்சிக் கூட்டம்ஒன்றில் பேசியபோது: நமது திட்டத்தை நிறைவேற்றுவதாக வாக்குப்பண்ணும் எந்தஅரசியல் கட்சியுடனும்அடுத்தபொதுத்தேர்தலில்சேர்ந்து கொள்ள எனதுகட்சி தயாராயிருக்கிறது; ஆயினும் கம்யூனிஸ்தார்கள், சமசமாஜிகள் முதலாம் மாக்ஸியர்களுடனும், அல்லது அவர்களுடன் சேர்ந்துகொள்ளுகிற வேறு எவர்களுடனும் நாம் சேரமாட்டோம்; இங்கே நாங்கள் மாக்ஸிய அபாயத்தை எதிர்த்துப் போராடவேண்டியவர்களாய் இருக்கிருேமெனக் கூறலாயினர்.

## சீமெந்து உற்பத்தி

காங்கேசன் துறையிலுள்ள அரசாங்க சீமெந்துத் தொழிற்சாலையிலே இரண்டாவது யந்திரச்சூளை ஒன்று ஸ்தாபிக்கப்படவிருக்கிறது. இந்தச்சூளை நாள் ஒன்றுக்கு 500 தொன்சீமெந்து உற்பத்திசெய்யக்கூடியது. அதனுல் தொழிற்சாலையின் சீமெந்துஉற்பத்தி இருமடங்காக அதிகரிக்கும். புதிய சூளையை ஸ்தாபிக்குமாறு ஐந்துலட்சம்ரூபா செலவுசெய்யக் கைத்தொழில் மந்திரியார் அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றிருக்கின்ருர்.

## வாழ்க்கைச் செலவு

இலங்கையிலே சென்ற மார்கழியில் வாழ்க்கைச்செலவுப் புள்ளித்தொகை முன்னர் எந்த மாதத்திலும் இல்லாதவகையிலே 288 ஆகப் பெரிதும்அதிகரித்திருக்கிறது. அதனுல் அம்மாசத்திலே அரசினருக்கு மேலதிகமாக இரண்டுலட்சம் ரூபா செலவேற்பட்டிருக்கிறது. சென்ற கார்த்திகையில் வாழ்க்கைச்செலவுப் புள்ளித் தொகை 284 ஆகும்.

## புதிய உபதபாற் கந்தோர்கள்

தபாற் பகுதியிலே இதுகாலவரை அலட்சியஞ்செய்யப் பட்டிருந்த பட்டினப்பகுதிகளிலும், கிராமப்பகுதிகளிலும் நிகழும் 1952-ம் ஆண்டிலே ஆயிரம் புதிய உபதபாற் கந்தோர்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இந்தப் புதிய திட்டத்திலே இதுவரை றெயிலுல் நடத்தப்பட்டுவந்த தபாற்சேவையினிடமாக வடபகுதியிலே வான் தபாற் சேவை ஒன்றும் அடங்கியிருக்கிறது.

## நான்குபேர் மாத்திரமே

கொழும்புநகரிலே புறக்கோட்டையைச்சேர்ந்த சென்செபஸ்ரியான் வட்டாரத்திலுள்ள மதுபானத் தவறணைகளை மறுபடிதிறக்கச் சனசம்மதிகேட்கப்பட்டபோதுநான்குபேர்மாத்திரமே அதற்குச் சீட்டுப்போட்டார்கள். அவ்வட்டாரத்திலே சீட்டுப்போடக்கூடிய வாக்காளரின்தொகை 2,835. சட்டப்படி, தவறணைகளை மறுபடி திறக்க விரும்புகிறவர்களே சீட்டுப் போடவேண்டியவர்சள். சீட்டுப்போடாமல் நின்றுவிடுகிறவர்கள் தவறணைகளை மறுபடி திறக்கப்படாதென்ற நோக்கமுடையோராகக் கொள்ளப்படுவார்கள்.

## சுதந்திரதினவிழா

அரசதம்பதிகளின் விஜயத்தையிட்டும், கொழும்புத்திட்டக் காட்சியையிட்டும் இவ்வருடம் இலங்கைச் சுதந்திரதினவிழாக் கொண்டாட்டத்திற்கான ஏற்பாடுகளிலே அதிகசிரத்தை காண்பிப்பது ஓரளவிலே தடைப்பட்டுள்ளது. இம்முறை கொழும்பிலே சுதந்திர தினமன்று இராணுவ அணிவகுப்பு நடைபெறமாட்டாது. ஏனையகொண்டாட்டங்கள் முந்தியவருடங்களிற்போன்று நடைபெறும். தேவைப்படும்போது மாசிமாதம் 4-ந்திகதியன்று விசேஷ றெயின்வண்டிகளை ஓடவைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படும்.

## மாதிரிச் சீமெந்துமில்

காங்கேசன்துறையிலுள்ள அரசாங்க சீமெந்துத் தொழிற்சாலை இஞ்சினீர்மார்சேர்ந்து மாதிரிச் சீமெந்துமில்லொன்றை அமைத்துவருகின்றனர். வருகிற மாசம் நடைபெறவிருக்கும் கொழும்புப் பொருட்காட்சியிலே இதுவும் காட்சிக்குவைக்கப்படவிருக்கிறது.

---

— பரிசுத்தபிதா தமது கிறிஸ்மஸ் விழாச்செய்தியிலே புதிய கருதினுல்மாரை ஆக்குவதற்கென்று கருதினுல்மார் திருச்சங்கத்தைக் கூட்டுவாரெனப் பரந்தசெய்திகள் சம்பந்தமாய் யாதொன்றுமே குறிப்பிடவில்லை. 70 கருதினுல்மார்இருக்கவேண்டிய திருச்சங்கத்தில் தற்போது 49 பேரே இருக்கின்ருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### பாப்பரசரும் புதியவருடமும்

வருடப்பிறப்புத் தினமன்று நடுச்சாமத்துக்குச் சற்றுவேளை சென்றபின் பரிசுத்த பாப்பரசர் தம்முடன் நெருங்கிய ஆலோசகர்களுடனும், தம்முடையகுடும்பத்தைச் சேர்ந்தவர்களுடனும் தமது பிரத்தியேக சிற்றாலயஞ் சென்று கடந்தவருடத்தின் பேரால் "தெதேயும" எனும் நன்றியறிந்த தோத்திர கீதம் பாடி 1952-ம் ஆண்டிலே சமாதானமும், சுபீட்சமும் உண்டாகும்படியாக மன்றாடிக்கொண்டார். அன்றுதினம் அதிகாலை புதிய ஆண்டின் முதற்திவ்வியபூசை நிறைவேற்றினார். பிறகு புத்தாண்டிலேதிவ்விய இஸ்பிரீத்துச் சாந்துவானவரின் உதவியை இரந்துகொள்ளுமாறு சிறிய தோர் பாடகர்குழாமுடன் "வேனிக்கிறே யாத்தோர்" எனும் கீதத்தைப்பாடினார். அன்று பிற்பகல்றோமைநகர்வாசிகளின் சோபனவாழ்த்துகளைச் சமர்ப்பிக்கவந்த அந்நகர் மேயரான சிஞ்ஞோர் சல்வாத்தோறே றெபெக்கினி அவர்களுக்குப் பேட்டியளித்தார்.

### மாணவிகளின் வேண்டுகோள்

சமீபத்திலே பரிசுத்த பாப்பரசர் அளித்த பேட்டிஒன்றில் சமுகமாயிருந்த 24 பேரில் கனடா தேச மாணவிகள் இருவரும் அடங்கியிருந்தார்கள். அத்தருணம் இவர்கள் பரிசுத்த பிதாவுடன் இஷ்டமாகச் சம்பாஷிக்க முடியுமென்பதை உணர்ந்தவர்களாய், திரும்பத் தங்கள் ஊர் போய்ச் சேர்ந்ததும் நடைபெறவிருக்கின்ற "மிகவும் விசேஷப்பட்ட பரீட்சை"யைப்பற்றிக் கதையோடுகதையாய் அவருக்குத்தெரிவித்தனர். பிறகு பரீட்சையிலே தாங்கள் சித்தியடையுமாறு பரிசுத்தபிதா மூன்று பிரியதத்தமந்திரம் சொல்ல வேண்டுமென்று அவரைப்பட்சமாகக் கேட்டுக்கொண்டார்கள். பாப்பரசர் இதைக்கேட்டதும் புன்முறுவல் பூத்தவராய்த் தமது சம்மதத்தின் அடையாளமாகத் தலையை அசைத்துநின்றார்.

### அதிர்ஷ்டமான வெள்ளிக்கிழமை

பிரான்ஸ் தேசத்து அரசரான பதின்மூன்றாவது லூயிஸ் மன்னர் தமதுசீவியகாலத்திலே சகலநாட்களிலும் வெள்ளிக்கிழமையையே தமக்குப் பெரும் பாக்கியமான நாளாகக் கருதிவந்தாரென அறிகின்றோம். ஓர் வெள்ளிக்கிழமையிலே தமக்கு மரணம் வரப்போவதை எதிர்பார்த்து அவர்சொல்லுவார்: "இது மெய்யாகவே எனக்கு ஓர் அதிர்ஷ்டமான வெள்ளிக்கிழமை. ஆனால், வெள்ளிக்கிழமைகள் எனக்கு அனுகூலமாயிருந்தமை இதுதான் முதன்முறையன்று. ஓர் வெள்ளிக்கிழமையிலேயேநான்சிம்மாசனமேறினேன். ஓர் வெள்ளிக்கிழமையிலேயே எனது முதல் வெற்றியை அடைந்தேன். ஓர் வெள்ளிக்கிழமையிலேயே சென் ஜோன் டி ஆன்ஜெலிநக்ரை அடிப்படுத்தினேன். ஆனால், இந்த வெள்ளிக்கிழமையோநித்தியகாலமும்சர்வேசுரனுடன் நான் இருக்கும்படியாக மோட்சத்தில் என்னைக்கொண்டுபோய்ச் சேர்க்கப் போவதிலிருந்து எல்லாவற்றிலும் மகா பாக்கியமானதாய் இருக்கும்."

### பாதிரிமாரின் குருபதவி

ஜேர்மனியிலே முன்னர் இவான்ஜெலிக்கல் புரொட்டஸ்தாந்தசபைப் பாதிரிமாராய் இருந்தவர்களும், விவாகஞ்செய்துள்ளவர்களுமான ஓர் தந்தையும், அவர் மைந்தரும் கத்தோலிக்க குருமாராக அபிஷேகஞ் செய்யப்படுமாறு பரிசுத்த பாப்பரசர் வழமைக்குமாறான விசேஷவிதிவிலக்கு அருளியிருக்கின்றார். குருமாரானபிறகும் இவர்கள் தமதுகுடும்பவாழ்க்கையில் எத்தகைய மாற்றமுமின்றியே இருந்துவருவார்கள். இவர்களுள் 70 வயசுடைய தந்தையாரான டக்றர் றுடல்வ் கோதே அவர்கள் கீர்த்திவாய்ந்த ஜேர்மனிய கவிஞரின் சந்ததியைசேர்ந்தவர். இவரையும், இவர்பாரியாரையும் மனந்திருப்பிக் கத்தோலிக்க திருச்சபையில்சேர்த்த மெயின்ஸ்நகர் மேற்றிராணியாரான ஸ்ரோர் ஆண்டவரே இவரைக் குருப்பட்டாபிஷேகம் செய்துவைத்தார். இப்புதியகுரவர் மேற்றிராசன மாளிகையிலேயே கடமைபார்க்கும்படி நியமனஞ்செய்யப் பெற்றுள்ளனர். குருவாக அபிஷேகஞ் செய்யப்பெற்றபின் இவர் புதல்வர் ஓர் சமயஆசிரியராகக் கடமைபார்த்துவருவார். ஜேர்மன் மேற்றிராணிமார்களது வேண்டுகோளின் பேரிலேயே பரிசுத்தபிதா இந்தச்சலிகையை அருளலாயினர்.

### வண. புறோ சுவாமியார்

1927-ம் ஆண்டு மெக்சிக்கோவிலே கம்யூனிஸ்த அரசினரால் சுட்டுக்கொல்லப்பெற்ற யேசுசபைக்குரவரான வண. மிகுவேல் புறோசுவாமியாருக்கு முத்திப்பேறுபட்டம் சூட்டுதற்கான விசாரணையைத் தொடக்கும் விஷயமாய்த் திருச்சடங்காசார திருச்சங்கம் ஆலோசித்துவருகின்றது. ஓர் சிலுவைவடிவமாகத் தமது கரங்களை நீட்டியபடியே கையிற்செபமாலையுடன் துப்பாக்கிப்படைவீரரை எதிர்நோக்கியவண்ணம் இவர் நிற்பதையும், அவர் சுடப்பட்டதும் குருதிபெருகும் அவர்உடலம்நிலத்தில்விழுந்து கிடப்பதையும் காண்பிக்கும் படங்கள் உலகமுழுவதும் அப்போது பத்திரிகைகளில் வெளிவந்து மிகஅருட்சியை உண்டுபண்ணின. இவர் மரிக்கும்போது 34 வயசுடையவராய் இருந்தார். அதற்கு இருவருடங்களின் முன்னரே இவர் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றிருந்தார். மெக்சிக்கோவிலே கத்தோலிக்க சமயானுசாரம் அரசினராலே விலக்கப்பட்டபோது, புறோ சுவாமியார் மாறுவேடம்பூண்டும், துரந்துகொள்ளப்பட்டும் தமது குருத்துவ தொண்டுமுழுவதையும் நடத்திவந்தார். பொலிசரின் கண்களில் அகப்படாது உபாயமாகத் தப்பிக்கொள்வதிலும், பொலிசரும் படைவீரரும் கண்டும் காணாதவிதமாய் வீரத்துவமாகத் தொண்டாற்றுவதிலும் இவர் அடைந்துகொண்ட வெற்றியானது இவரை ஓர் தேசீய வீரர்திலகமாக்கிவிட்டது. அதனால் இவர் பிடிபட்டதும் பிரசித்தமாக இவரைச் சுட்டுக்கொல்லும்படி அரசாங்கம் கட்டளைபிறப்பித்தது.

---

## பருத்தித்துறை தும்பளை
## பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள்
### மாசிமாதம் 11-ந் திகதி

இத்திருநாளுக்கு ஆயத்தமாக மாசிமாதம் 1-ந் திகதி சாயந்தரம் 6 மணிக்கு நோவனை தொடங்கும்

நிகழ்ச்சிகள் :—

[1] மாசிமாதம் 10-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு மெழுகுவர்த்தித் தீபஅலங்காரச் சுற்றுப் பிரகாரம்.

[2] பிற்பகல் 7 மணிக்குப் பிரசங்கம்.

[3] பிற்பகல் 7-30 மணிக்கு மகாவந். மேற்றிராணி ஆண்டவர்அவர்களால் வேஸ்பர் ஆராதனை — தேவநற்கருணை ஆசீர்வாதம்.

[4] 11-ந் திகதி காலை 7 மணிக்குப் பாடற்பூசை.

☞ திருக்கேபியில் யாத்திரிகட்கேற்ற சகல வசதிகளுமுண்டு.

மகாவந். மேற்றிராணியாண்டவர் சமுகமளிப்பார்.

கட்டளைக்குரவர்

---

### கர்த்தர் பிரத்தியட்சத்தின் பின்
## 3-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு
(அரு. 8: 1—3)

அக்காலத்தில் யேசுநாதர் மலையினின்று இறங்கினபோது திரளான சனங்கள் அவரைப் பின்சென்றார்கள். அப்போது இதோ, குஷ்டரோகி ஒருவன் வந்து: ஆண்டவரே, உமக்குச் சித்தமானால் என்னைச்சுத்தமாக்க உம்மாலாகுமென்றுகூறி அவரைநமஸ்கரிக்க, யேசுநாதர் தமது கரத்தைநீட்டி, எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகுகவென்று அவனைத் தொட்டார்; தொடவே அவனுடைய குஷ்டம் குணமாயிற்று. அப்பொழுது யேசுநாதர் அவனை நோக்கி: இதை ஒருவருக்குஞ் சொல்லாதபடி எச்சரிக்கையாயிரு; ஆனால், நீ போய் ஆசாரியனுக்கு உன்னைக்காண்பித்து, அவர்களுக்கு அத்தாட்சியாக மோயீசன்கட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்தென்றார். பின்னும், அவர் கப்பர்னவூமரில் பிரவேசித்தபோது நூறுபோர்ச்சேவகருக்கு அதிபதியான ஒருவன் அவரிடத்தில்வந்து அவரை மன்றாடி: ஆண்டவரே, திமிர்வாதத்தினால் என்ஊழியன் வீட்டிற் கிடந்து கடினவாதைப்படுகிறான் என்றான். அதற்குயேசுநாதர்: நான்வந்து அவனைச்சௌக்கியப்படுத்துவேனென்று அவனுக்குத் திருவுளம்பற்றினார். அதற்குச்சேர்வைக்காரன் மறுமொழியாக: ஆண்டவரே, நீர் என் இல்லத்தில் பிரவேசிக்க நான் பாத்திரவானல்ல; தேவரீர் ஒரு வார்த்தை மாத்திரமே சொல்லியருளும், என்ஊழியன் சௌக்கியம் அடைவான். ஏனெனில், நானும் அதிகாரத்துக்குக்கீழ்ப்பட்ட மனிதனாயிருக்கிறேன். எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற போர்ச்சேவகருமுண்டு; அப்படியிருக்க நான் ஒருவனைப் போ என்றால் போகிறான்; மற்றொருவனை வாஎன்றால் வருகிறான்; என்ஊழியனை இதைச்செய் யென்றால் செய்கிறானென்றான். அதைக்கேட்டு யேசுநாதர் ஆச்சரியப்பட்டுத் தம்மைப்பின் சென்று வருகிறவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: நான் இஸ்ராயேலரிடத்தில் இவ்வளவு பெரிதான விசுவாசத்தைக் காணவில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆதலால், கிழக்கிலும் மேற்கிலுமிருந்து அநேகர்வந்து பரலோக இராச்சியத்தில் அபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுஎன்பவர்களுடனே பந்தியில் இருப்பார்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இராச்சியத்தின் மக்களோவெனில், புறம்பான இருளில் தள்ளப்படுவார்கள். அங்கே அழுகையும்பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்றார். பின்னும்யேசுநாதர், சேர்வைக்காரனை நோக்கி: நீ போகலாம், நீ விசுவசித்தபடியே உனக்காகக்கடவதென்றார். அந்நேரமே ஊழியன் சௌக்கியப்பட்டான்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

* * *

### வேலைநிறுத்த நஷ்டம்

இலங்கைக் குச்சிப்பெட்டித்தொழிற்சாலையிலே தொழிலாளிகள் 47 தினங்களாகச்செய்த வேலைநிறுத்தத்தால் 1 கோடியே 30 லட்சம் குச்சிப்பெட்டிகள் செய்யப்படவில்லையென்றும், வேலைநிறுத்தஞ்செய்த தொழிலாளிகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் 56,000 ரூபாவென்றும் அத்தொழிற்சாலைக்கம்பெனியின் தலைவர் தெரிவித்திருக்கின்றார்.

---

### அறிவித்தல்

யாழ்ப்பாணம், கரையூர், அர்ச். செபஸ்தியார்கோவில்பேரால் உங்கள் நேர்த்திக்கடன் பணத்தையும், கோயிற் திருப்பணிக்குரிய பணத்தையும் வண. கட்டளைச் சுவாமியாருக்குக் கொடுக்கும்படி, அல்லது அனுப்பிவைக்கும்படி தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அ. கயித்தான்
மூப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1952-ம்ஆண்டுக்கான
**இலங்கைச் சத்தியவேத பஞ்சாங்கம்**

புத்தக ரூபமானது
விலை பிரதிசதம் 25.
தபாற்செலவு பிரத்தியேகம்.

**Manager**
St. Joseph's Catholic Press,
Jaffna.

## திருநாள் அட்டவணை

**தைமாதம் 1952**

| | | | |
|---|---|---|---|
| வெ | 25 | அ. சின்னப்பர் மனந்திரும்பின திருநாள் | (வெ) |
| சனி | 26 | அ. பொலிக்கார்ப்பியார் | (சி) |
| ஞா | 27 | கர்த்தர் பிரத்தியட்சத்தின் பின் 3-ம் ஞாயிறு — அ. கிறிசோஸ்தொம் அருளப்பர் | (ப) |
| திங் | 28 | அ. பேதுரு நோலாஸ்கு | (வெ) |
| செ | 29 | அ. பிரான்சீஸ்கு சலேசியார் | (வெ) |
| புத | 30 | அ. மர்த்தீனம்மாள் | (சி) |
| வி | 31 | அ. யோண் பொஸ்கோ | (வெ) |

சத்தியவேத
**பாதுகாவலன்**

1952-ம் ஆண்டு
தைமாதம் 24-ந் திகதி.

## ஸ்ரீ நேருவின் எச்சரிக்கை

கம்யூனிஸ்த கொடுங்கோன்மை நடைபெற்று வருகின்ற இரும்புத்திரை நாடுகளிலே மனித சுதந்திரங்கள் அனைத்தையும் மக்கள் இழந்து, வாய்பேசா மிருகங்களைப்போல யாதும் செய்துகொள்ள வியலாது அடிமைப்பட்டுச் சிறுமைப்பட்டுக் கெட்டார் தழையாரோ, கேடொருகால் நீங்காதோஎன்று கதிகலங்கிக்கொண்டிருக்க—கம்யூனிஸ்த பைசாசத்தின் கபடதந்திரமான பரிநாசவேலைகளைக் கவனித்துச் சுதந்திரநாடுகள் விழித்தெழுந்து அதனை ஒழித்துக்கட்டுமாறு அல்லும்பகலும் அயராது முயன்றுகொண்டிருக்க—அதனல் பிரான்ஸ், இத்தாலி, பிரித்தானி முதலாம் பலநாடுகளிலும் கம்யூனிஸ்த பலம் தளர்ந்துகொண்டிருக்க—இந்தியாவிலே — அதிலும் விசேஷமாய்த் தமிழர்கள் வதியும் சென்னை இராச்சியத்திலே கம்யூனிஸம் தீவிரமாகப் பரந்துகொண்டு வருவதானது பெருங் கவலையைத்தருவதாகும். ஆங்கு தற்சமையம் நிகழ்ந்துகொண்டிருக்கும் பொதுத்தேர்தலே நாம் சொல்வதற்குப் போதிய சான்ருகும். இவ்வாறு கம்யூனிஸம் இடங்கோலிக்கொண்டு வருமாஞல் மகத்தான பாரம்பரியங்களையும், புராதனப் பெருமை வாய்ந்த ஆலயங்கள், மறுஸ்தாபனங்களையும், உயர்ந்த தார்மிக லட்சியங்களையும் கொண்டுள்ள ஓர் நாட்டின் கதியாதாகும்?

இந்திய பிரதமரும், இந்திய காங்கிரஸ் தலைவருமான ஸ்ரீ ஜவகர்லால் நேரு அவர்கள் ருஷியாவுடனும், சீனவுடனும் அவ்வப்போது நடந்துகொண்ட முறைகளைக் கவனித்தபோது, அவர் "பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்" போலத்தான் நிற்கிருரோவென்று தானும் நினைக்க வேண்டியதாயிற்று. ஆயினும்அவர் கம்யூனிஸ்தர்கள் பின்பற்றும் முறைகளை நன்கறிந்திருக்கிருர் என்பது அவர் பேச்சிலிருந்தே தற்போது பகிரங்கமாயிருக்கிறது. சென்ற20-ந்திகதியன்று காசிப்பூரிலே சுமார் ஒருலட்சம் மக்கள் குழுமியிருந்த தேர்தற்பிரசார கூட்டத்தில் அவர் பேசியபோது: "தாங்கள் நேசிக்கும் ஒருநாடு இந்தியாவை ஆளுகிறவரையிலே கம்யூனிஸ்தர்கள் திருப்தியடையவே மாட்டார்கள். ஆனல், அவர்கள் பின்பற்றும் முறைகள் நாட்டுக்குப் பெருநாசத்தையும், பேரழிவையும் கொண்டுவரக்கூடியனவாய் இருக்கின்றன. இந்தியாவின் தென்பகுதியிலே கம்யூனிஸ்தர்கள் பெருமளவில் கொள்ளையடிக்கவும், கொள்ளிவைக்கவும், ஈவிரக்கமற்றமுறையிலே பலாத்காரச்செயல்களில் ஈடுபடவும்தொடங்கினர். ஆனல் அரசாங்கம் பலத்தபொலிஸ் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டபோது அவர்கள் தங்கள்பலாத்கார இயக்கத்தைக் கடைசியாகக்கைவிட்டார்கள்"எனக் கூறியிருக்கின்ருர். ஆனல் கம்யூனிஸம்பரந்து, கம்யூனிஸ்த பிரதிநிதிகள் பொதுத்தேர்தலில் அதிக ஸ்தானங்களைப் பெற்றுவருவதிலிருந்து அவர்களின் பலாத்காரஇயக்கம் திரும்பவும் தலைகாட்டாதிருக்கும் என்பதற்கு நம்பிக்கையுண்டா? இந்திய அரசியலில் கம்யூனிஸ்த கட்சி இடம்பிடித்துக்கொண்டபோதோ அது இனிச்சும்மாவிருக்குமென்று சொல்ல இடமுண்டா!

நிற்க, இலங்கைப் பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக அவர்கள் சென்றவருடம் அரசிறைவரவுசெலவுத்திட்ட விஷயமாய் நடைபெற்ற விவாதத்தின் போது கூறியதையும் இந்த வேளை ஞாபகத்திற்குக்கொண்டு வருவது நலமாகும். "எதிர்க்கட்சியிலுள்ள கம்யூனிஸ்த பிரதிநிதிகள்எல்லோரும் ருஷியாவிற்போய்க் குடியேறப் "பாஸ்போட்" கேட்பார்களேயானல், அவர்களுக்கு வேண்டியஉதவியை நான் செய்வேன். எந்தமக்கள் பின்பற்றும்கொள்கைகள் உங்களைக்கவருகின்றனவோ அந்தமக்களுடன்போய் வாழுங்கள். போய்வாழ்ந்து சந்தோஷமாயிருங்கள். எங்களுடைய வாழ்க்கைமுறையுடன் இங்கு சந்தோஷமாய் இருக்க எங்களை விட்டுவிடுங்கள். அவர்களுக்கு நான் சொல்லவிரும்புவது இவ்வளவுதான்" என்று அழுத்தமாகக் கூறினர். எமது நாட்டிலே தற்சமயம் அரசு நடாத்திவரும் ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கம கம்யூனிஸத்தின் சென்மசத்துருவாகும். இந்த ஐக்கியதேசீய கட்சியை விழுத்தித் தமது அரசியல்நோக்கங்களைப் பூர்த்திசெய்து விடுவான் கம்யூனிஸ்தகட்சியுடனும், சமசமாஜ கட்சியுடனும், நவலங்கா சமசமாஜ கட்சியுடனும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியோ, குடியரசுக்கட்சியோ, தமிழரசுக்கட்சியோ, இந்திய - இலங்கைக் காங்கிரஸ் கட்சியோ உறவாடுமானல் — அவற்றுடன்சேர்ந்து ஓர்முன்னணிக்கட்சியை உண்டுபண்ணுமானல், குளத்தைக் கலக்கிப் பருந்திற்கிரை கொடுத்த வாருகவே கருமம முடியும். அதனல் பிரதமர்நேரு அவர்களும, பிரதமர் சேனநாயக அவர்களும் கூறியிருப்பவைகளை அனைவரும் கருத்திற்கொண்டு கம்யூனிஸ்தர்கள் மட்டில் எச்சரிக்கையாய் நடந்துகொள்வார்களாக!

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் தேங்காய் 40 சதம் 50 சதமாக விலையேறிவிட்டது. வெங்காயம் றுத்தல் ஒன்று 1 ரூபா 25 சதமாகவும் விலைப்படத் தொடங்கிவிட்டது. குச்சிப்பெட்டி 10 சதமாகவும் விலைப்படுகிறது உணவுப்பொருட்களும் விலையேறிக்கொண்டேபோகின்றன. இந்தநிலைமையிலே போதாக்குறைக்கு யாழ்ப்பாணத்திலே அம்மைநோய் தலைகாட்டியிருப்பதையிட்டுச் சனங்களிடையே பயப்பிராந்தி எற்பட்டுள்ளது. அதனல் இந்தநோய் பரவாது பாடசாலைகளிலும், சந்தைகளிலும், ஆஸ்பத்திரிகளிலும், பஸ்களிலும் அம்மைப்பால் குற்றப்படுகின்றது. குளிருடன் கூடிய காற்றுவீசி மக்களைக் கொடுகவைக்கிறது.

### பிரதமரின் விஜயம்

பிரதமர் டி. எஸ். சேனநாயகஅவர்கள் நாளைநின்றுவரும் 26-ந் திகதி சனிக்கிழமைகாலை றெயின்வழியாகச் சாவகச்சேரி வந்துசேர்ந்து அத்தொகுதியிலே இரண்டுநாள்தங்கி மறுநாள்இரவு பாந்தனிலிருந்து றெயின் வழியாகக் கொழும்புக்குத் திரும்புவார். அங்கே அவர் தங்கியிருக்கும்போது தபாற்கந்தோர்வீதியிலுள்ள மாக்காலையையும், சாவகச்சேரி ஆஸ்பத்திரியையும் பார்வையிடுவார். கைதடிப் புதிய வயோதிகர்சாலைக்கு அஸ்திபாரக்கல் நாட்டுவார். சாவகச்சேரிப் பெண்கள் கல்லூரியைத் திறந்துவைப்பார். சனிக்கிழமைமத்தியானம் யாழ்ப்பாண நகருக்கு மோட்டார்தமூலமவந்து கிறீஸ்த இளைஞர்சங்க நிலையத்துக்கு அஸ்திபாரக்கல் நாட்டுவார். ஞாயிற்றுக்கிழமை பாந்தன் நெல்விளைவு நிலையத்தையும், குடியேறியவர்களின் குடிசைகளையும் பார்வையிடுவார். கரைச்சிக் கமக்காரர் ஐக்கியசங்கத்தின் உபசாரத்துக்குச் சமுகமளித்துவிட்டுக் கொழும்புக்குப் பிரயாணமாவார்.

### மற்றுமோர் காரியாதிகாரி

சாவகச்சேரிப் பிரதிநிதியான திரு. வி. குமாரசாமிஅவர்கள் தமது தொகுதியிலே மற்றுமோர் காரியாதிகாரியை (டி. ஆர். ஓ.) நியமனஞ்செய்ய வேண்டுமென்று அரசினரைக் கேட்டுவருகின்ருர். இப்போது அவருடைய தொகுதியிலே சாவகச்சேரியிலும், பளையிலும் பூநகரியிலுமாக ஏறக்குறைய ஆயிரம் மைல் விஸ்தாரமானபகுதியில் மூன்று காரியாதிகாரிகள் இருந்துவருகிருர்கள். இவர்களுடன் ஓர் வன்னிப்பகுதியாகிய நுணுக்காய்ப் பிரிவுக்கென்று வேருகப் பாந்தன் அல்லது கிளிநொச்சியிலிருந்து கடமைபார்க்கக்கூடிய ஓர் காரியாதிகாரியை நியமனஞ்செய்ய வேண்டுமென்பதே அவருடைய கேள்வியாகும்.

### தொடர்ந்துவரும் விடுமுறைகள்

இலங்கையிலே அரசாங்கவிடுமுறைகளில் செய்யப்பட்டுள்ள மாற்றங்காரணமாக வருகிறசித்திரைமாதம் 10-ந் திகதிமுதல்18-ந்திகதிவரையில்தொடர்பாக விடுமுறைநாட்கள் இருந்துவரும். அம்மாசம 10-ந்திகதிமுதல் 12-ந்திகதிவரையும் ஈஸ்றர் விடுமுறைநாட்கள். 13-ந்திகதி ஓர் ஞாயிற்றுக்கிழமை அதனமேல 14-ந்திகதி முதல் 18-ந் திகதிவரையில் சிங்கள, தமிழ் புதுவருடப்பிறப்பு விடுமுறைநாட்கள். அதனல் பிறநாடுகளுடன் கொள்வனவு, விற்பனவு நடத்துவனவாய்க் கொழும்பிலுள்ள வர்த்தகசமுதாயங்கள் அத்தனைநாட்களுக்குத் தங்கள் முயற்சிகளை நிறுத்திக்கொள்ள முடியாமல் இருக்கின்றன.

## தவறை ஒப்புக்கொண்டால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உடனே மேற்றிராணியார் தமதுதவறை உணர்ந்தார். மிகவும்வருத்தப்பட்டுப் பிரசங்க மேடையில்நின்று, "நான் எழுதியபுத்தகம் படிக்கத்தகாதது. அதுவேதத்திற்குப் புறம்பானது. அதை எரித்துவிடுங்கள் எரித்துவிடுங்கள்" என்ருர். இந்தமாதிரியாக ஒருவர் தமது தவறை வெளிப்படுத்தியது ஆச்சரியம்அல்லவா? எவ்வளவு பொறுமையும், கீழ்ப்படிதலும், தவறையுணர்தலும் நம்மிடத்தில் மிளிரவேண்டும்!

யேசுநாதர், இராயப்பரைப் பார்த்து "இன்றுகாலை சேவல் கூவுவதற்குமுன் என்னைமூன்றுமுறை மறுதலிப்பாய்" என்ருர். ஆனல், இராயப்பரோ: "நான் உம்மோடு இறந்தாலும் கூட உம்மை மறுதலியேன் என்ருர். ஆனல், நடந்ததென்ன? தம்முயிருக்குப்பயந்து "அவரை அறியேன்" என்று மூன்றுமுறை மறுதலித்தார். மூன்ரும்முறை மறுதலித்த பிறகு சேவல் கூவிற்று. அப்போது ஆண்டவர் இராயப்பரைத் திரும்பிப் பார்த்தார். அதில் எவ்வளவோ சோகம் நிறைந்திருந்தது. இராயப்பருக்கு வருத்தம்மேலிட்டது. மனங்கசிந்து அழுதார். தமது தவறை எவ்வாறு உணர்ந்தார் பாருங்கள். உங்களைக் கொஞ்ச நேரம் அந்தநிலையில் இருத்தி யோசித்துப்பாருங்கள். உண்மை விளங்கும்.

"கத்தோலிக்கர் தங்கள் தவறை ஒத்துக்கொள்வதில்லை" என்று அடிக்கடி சிலர்சொல்லுகிருர்கள். "குருமார் தங்கள் ஒழுக்கத்தில் தவறியிருக்கிருர்கள்" என்றுசொல்லுகிருர்கள். குருமார்தானும் மனிதசுபாவம் படைத்தவர்களல்லவா? இதோ இந்த வாசகத்தைக் கருதினல் ஜேம்ஸ் கிப்பன்ஸ் தாம்எழுதிய "எங்கள் தந்தையர்களின் விசுவாசம்" என்ற புத்தகத்தில் கூறுகிருர். இந்தச் சந்தேகப் பேர்வழிகள் இதைஉணர்ந்தால் போதும். அதாவது"திருச்சபையின் சரித்கிரத்திலே சிற்சில சமயங்களில்—முக்கியமாகக் கலவர காலங்களில் மதப்போதகர்கள்கூடத் தவறி நடந்திருக்கிருர்கள். இதனல் 'மதபோதகர்கள் ஒழுக்கம்குன்ருமல் இருக்க வேண்டும' என்ற விதி இல்லாமல் இருக்கவில்லை. குருமார் ஒழுக்கக் குன்றுகளாய் நடக்க வேண்டும் என்றுதான் திருச்சபை எப்போதும் சொல்லி வந்தது." ஆகையால், மனிதசமுதாயத்திலே தவறுதல் உண்டாகாமல் இருக்கமுடியாது. அதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புக்கொள்ளத் தயங்கக்கூடாது என்பதுதான் நமது நோக்கமாயிருக்கவேண்டும். ஒருவர்மேல் ஒருவர் பழியைப்போட்டுக்கொண்டு காலங்கடத்துவதால் என்ன இலாபம்? மனித வாழ்வே குறுகியது. இதில் ஏன் இத்தனை பித்தலாட்டங்கள்? ஒளிவுமறைவுகள்? தயக்கங்கள்?

— ந. கி. மலர்

ஸ்ரீமான் M. C. தம்பிப்பிள்ளை அவர்களின்

## தேகவியோகம்

பண்டத்தெருப்பு கடந்த 9-ந்திகதி புதன்கிழமை தனது உத்தமபுத்திரன் ஒருவரை இழந்து துக்கசாகரத்தில் மிதக்கலாயிற்று. அன்று காலை பாத்திமா ஆலயத்தில் பூசைமணி அசைந்தாடிக்கொண்டிருந்தது. வயல்வெளிகளில் மிருதுவான தென்றற்காற்று உலாவிச்சென்றது. அந்தச்சமயத்தில் பிரதான வீதியில் செபமாலை மணிகளை உருட்டிக்கொண்டே விரைவான நடையோடு பூசைக்குப் போய்க்கொண்டிருக்கிறார் ஒருவர். அவருடைய அகன்ற நெற்றியும், உழைப்பால் களைத்த உடலும், சிவந்த நிறமும், சாந்தமானபோக்கும் நமதுகவனத்தை இழுத்துக்கொள்ளுகின்றன. ஆனால், அவரை அந்தக்காலைநேரத்தில் நெடுநேரம் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. பூசைக்குப்போகும் பாதையிலேயே அவர் மோட்சபாதையைத் தெரிந்து கொள்ளுகிறார். தேவனுடைய நேரம்வரவே அவர் மரணத்திரையில் மறையலாயினர். அவர்தான் ஸ்ரீமான் M. C. தம்பிப்பிள்ளை ஓவசியர் அவர்கள்.

ஸ்ரீமான் தம்பிப்பிள்ளை அவர்களுடைய வாழ்க்கை பொதுசனத்துக்கும், முக்கியமாய் ஓவசியர்மாருக்கும் ஒரு முன்மாதிரிகையானது. கடந்த ஏழு ஆண்டுகளாகப் பாத்திமாராணியின் சேவையை விரும்பி ஆலயம், கிணறு, கன்னியர்மடம் இவற்றின் புனரமைப்பில் இவர் முக்கியபாகத்தைத் தெரிந்துகொண்டார். கட்டளைச் சுவாமியாருக்கு இவர் அரியதுணையாயிருந்தமையால் "நான் பாத்திமா கோயிலில் உள்ளவரையும் ஒவ்வொரு புதனும் அவர் கல்லறையில் செபம்சொல்லத் தவறேன்" என்று உருக்கமாக உறுதி கூறலாயினர். கோயில், பாடசாலை என்ற பேரைச் சொல்லி இவரிடம் எதைக் கேட்டாலும் இவர் இல்லை என்றுசொல்வது அபூர்வம். பண்டத்தெருப்பு அர்ச். அந்தோனியார் ஆலயத்தின் மணிக்கோபுரமும், சற்பிரசாதபீடமும் இவரை என்றும் நினைவூட்டுவனவாகும். இப்பகுதியில் மாத்திரமல்ல, பல நூற்றுக்கணக்கான மைல்களைக்கடந்து நாம் அப்புத்தளைக்குச் சென்றால் அங்குகூட நாம் இவரது உதாரசிந்தையின் சின்னங்களைக் காணலாம். 1850-ம் ஆண்டளவில் கட்டப்பட்டுப் பின்னர் சிதைந்திருந்த அல்தமலைக் கோயிலைப் புதுக்கினர். அங்குநவமாய் ஒருமணிக்கோபுரத்தையும் அமைத்தார். பண்டாரவளையில் சிற்பத்தின் உன்னதசிகரமாய் விளங்கும் அர்ச். அந்தோனியார் ஆலயம் இவருடைய மேற்பார்வையிலேயே நிர்மாணிக்கப்படலாயிற்று.

ஸ்ரீமான் கிறிஸ்தோப்பர் தம்பிப்பிள்ளை அவர்கள் இலங்கை, பாகமுதலியார் மரபினர். மறைந்த சங். டேவிட் விறதர் இவருடைய சிறிய தந்தையாரே. இவர் சம்பத்திரிசியார் கல்லூரியில் தமதுபடிப்பை முடித்துக்கொண்டு பகிரங்கவேலைப் பகுதியிலே உத்தியோக சேவையில் அமர்ந்தார். இவருடைய அற்புதமான வேலைத்திறமையை எலிஓயாப் பாலத்தில் பிரயாணம் செய்கிறவர்கள் மறக்க முடியாது. கட்டிடவேலையில் இவர் சாமர்த்தியசாலியாய் இருந்ததோடு, தமிழ் நூல்களைக் கற்பதிலும், தேம்பாவணி முதலிய காப்பியங்களுக்கு உரை சொல்வதிலும் சிறந்து விளங்கினர். இவரின் சிரேஷ்டபுதல்வியார் இளவாலை, ஆங்கிலமடஅதிபர் சிஸ்றர் மேரி ஊசில்லா, B. A. அவர்களாவர். யாழ்ப்பாண ஆங்கிலமடத்து ஆசிரியையாயிருந்து இப்பொழுது போதனை கல்வி பெறச் சென்றிருக்கும் ஸ்ரீமதி அமிர்தநாயகம் அவர்களும, முகத்துவாரக் கன்னியர்மடத்து ஆசிரியையான ஸ்ரீமதி பயஸ் அவர்களும், திருச்சினைப் பள்ளியில் சர்வகலாசாலைப் படிப்புப் பெறும் செல்வி பிளசமும் இவருடைய ஏனைய புத்திரிகளாவர். தோலகட்டி ஆச்சிரமத்தைச் சேர்ந்தவராய் இப்பொழுது வடக்கன்குளத்தில் திருஊழியம்செய்யும் வண. சுவாமி பாக்கியநாதரும், பலாலி ஆசிரியபயிற்சிக் கல்லூரிப் போதகாசிரியரும், பொதுசன ஊழியருமாகிய ஸ்ரீ P. M. வேதநாயகம், B. A. அவர்களும், சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியருள் ஒருவரான ஸ்ரீ P. J. அமிர்தநாயகம் அவர்களும், ஸ்ரீமதி நவரத்னசிங்கம், ஸ்ரீமதி சிங்கராயர் என்போரும் இவருடைய மருமக்களாவர்.

இவருடைய பிரேதசேமமானது மறுநாள் சாயந்திரம் சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர், பிரதமமுகாமையாளர், அர்ச். என்றியரசர் கல்லூரி அதிபரை உள்ளிட்ட 15 குருப்பிரசாதிகள், 25 கன்னிகாஸ்திரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், இனசனர், அன்பர்களாகச்சூழ்ந்த அனுதாபிகள் மத்தியில் பண்டத்தெருப்புக் கட்டளைச்சுவாமியார் துக்ககீதம்பாட அழகியபேழையில் வைக்கப்பெற்றுக் கல்லறையில் சிறப்பாக நடைபெறலாயிற்று. இவருடைய பிரிவால் கலங்குவாரோடு நாமும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இவருடைய ஆன்மா சாந்தியடைவதாக!

## எமது பாத்திமா யாத்திரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டதாகும். அங்குள்ள ஒவ்வொருவரும் மேம்பாடுள்ளவர்களாய், அல்லது செல்வசம்பத்துடையவர்களாய் வரவேண்டுமென்ற சிந்தனையே இல்லாது, ஆனால், செபமாலை மூலமாகத் தேவதாயார் உலகத்துக்குச் சமாதானத்தைப் பெற்றுக்கொடுக்கத் தக்கதாக எவ்வளவுசெய்யமுடியுமோ அவ்வளவையும் செய்துமுடிக்க வேண்டுமென்ற காதலுடையவர்களாய்மாத்திரம் இருப்பதாக அவர்களைக்கவனிக்கும் ஒருவர் உணர்ந்துகொள்கின்றார்.

செபமாலைசம்பந்தப்பட்ட மட்டிலே ஓர்சிறந்த பத்தியனுசாரம் அங்குநிலவிவருகின்றது. உண்மையாகவே அங்குள்ள குடும்பங்கள் செபத்துக்கென்று தாங்கள்ஒன்றுகூடுவது கஷ்டமென்பதைக் கண்டுகொள்ளுகின்றன. ஆனால், ஒருமாதிரியான பொதுச்செபம் அவர்கள் கருத்திலே அதிகம் சித்திகரமாக நடைபெற்றுவருகிறது. பெண்மணிகள் ஒருவரோடொருவர் கலந்துபேசிச் செபமாலை சொல்வதற்கெனத் தங்கள்குடும்பங்களுக்கு ஓர் வேளையைக் குறிக்கின்றார்கள். அந்த வேளையிலே அவர்கள் தத்தம் வீடுகளிலிருந்து செபமாலை சொல்லும்போது ஒவ்வோர் குடும்பமும் தாங்கள் மற்றவர்களுடன் செபஞ்செய்வதாக மனதிலே உணர்ந்து கொள்ளுகின்றன. இந்தஉணர்ச்சியினால் ஒன்றுகூடிய சனசமூகம் பத்திவாழ்க்கை ஆழ்ந்ததாக்குகின்றது. பாத்திமாத் தரிசனையி லிருந்து படிக்கவேண்டியது எவ்வளவோ அதிகம் இருக்கிறது.

(தொடரும்)

## மாணவர் பூமிசாஸ்திர புத்தகங்கள்

ஆசிரியர் L. கிறேஷியன் அவர்கள் எழுதிய மாணவர் பூமிசாஸ்திரம் 2-ம், 3-ம, 4-ம் வகுப்புகளுக்குரிய புத்தகங்கள் வரப்பெற்றோம். ஐந்தாம் வகுப்புக்கு அவர் எழுதியுள்ள முறையைப் பின்பற்றிப் படங்கள் ஒருபக்கமும், அவற்றை விளக்கும் பாடங்கள் எதிர்ப்பக்கமும் அமைந்திருக்க 4-ம்வகுப்புப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. சுற்றுப்புறங்களிலும், அயற்தேசங்களிலும் தங்களோடொத்த சிறுவர்களின் வாழ்க்கைமுறைகளை அறிவதன்மூலம் அவ்வவ்விடங்களில்வதியும் மக்களின் வரலாற்றை மாணவர்கள் திறம்பட விளங்கிக் கொள்ளக்கூடிய கதைமுறையாக 2-ம் 3-ம் புத்தகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

இவைகள் வித்தியாபகுதியாரின் புதியபாடத்திட்டத்துக்கு இசைந்தனவும், வகுப்புகளுக்கேற்ற பொருளமைப்பும், விஷயத்தெளிவும் உடையனவுமாகும். இக்கால கல்விமுறைக்கேற்பத் திருத்தமான புதியமுறையில் எழுதப்பட்டுள்ளன. இவற்றில் அமைக்கப்பட்டிருக்கும் தேசப்படங்கள், விளக்கப்படங்கள், காட்சிப்படங்கள் சிறந்தவைகளாகவும், சிறார்க்குப் பெரிதும் பயன்படக்கூடியனவாயும் இருக்கின்றன. ஒவ்வொரு பாடமுடிவிலுமுள்ள பயிற்சிவினாக்களும், செய்கைஅப்பியாசங்களும் விஷயத்தை மனதிற்பதியச் செய்வதற்கு அனுகூலமானவை.

பூமிசாஸ்திர பாடத்தில் ஆசிரியர், மாணவர்ஆகிய இருபாலாருக்கும் ஓர் நிலையானபற்றையும், ஊக்கத்தையும் உண்டுபண்ணுவதற்கு இந்நூல்கள் பெரிதும் துணைபுரியும் என்பதே நம்முடைய கருத்தாகும். அகிலஇலங்கை ஆசிரியர்சங்கத் தலைவராயிருந்த திரு. A. E. தம்பர் B. Sc. அவர்களும், யாழ்ப்பாணமேற்றிராசன கத்தோலிக்க பாடசாலைகளின் பிரதம முகாமைக்காரர் அதிவண. T. A. J. மதுரநாயகம், B. A. அவர்களும் அளித்துள்ள மதிப்புரைகளே இவற்றின் சிறப்பை எடுத்துக் காட்டப்போதியன. இவற்றின் விலைகள் முறையே: பிரதிஒன்று சதம் 50, சதம் 60, சதம் 90. நமக்கு அனுப்பிய பிரதிகளுக்காக நன்றிகூறுகின்றோம். இவைகள் தேவைப்படுவோர் பின்வரும்விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வ. லூக்கேஸ்பிள்ளை
காடியன் ரஞ்சல் புத்தகசாலை,
கரவெட்டி.

## புதிய அனுராசபுரம்

அனுராசபுரப் புதியபட்டினம் படிப்படியாகப் புழக்கத்துக்கு வந்துகொண்டிருக்கிறது. முன்னர் ஸ்ரீமகாபோதி விகாரைக்குச் சமீபமாக வசித்திருந்த தொழிலாளர் குடும்பங்கள் அங்கு பட்டினசங்கம் கட்டியுள்ள முதல்வரிசை வீடுகளில் அமர்த்தப்பட்டிருக்கின்றன. 15 லட்சம் ரூபா செலவிட்டுக் கட்டப்பெற்ற புதியகட்டடங்களிலே அனுராசபுர மத்தியகலாசாலை இம்மாசத் தொடக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே புதியகட்டடங்களை அமைக்க அரசாங்கம் பெருந்தொகைப் பணம் அனுமதித்திருக்கிறது. ஓர் புதிய ஆஸ்பத்திரிக்கு 5 லட்சம் ரூபாவும், ஓர் புதியவாடிவீட்டுக்கு 4 லட்சம் ரூபாவும் விடப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணம் கத். பாடசாலைகளின் பிரதம முகாமைக்காரரின் கந்தோர்

## வேலை நேரம்

கிழமை நாட்கள் } மு.ப. 9 — 12 மத்தி.
பி.ப. 2 — பி.ப. 4.30
சனிக்கிழ. மு.ப. 9 — பி.ப. 1.

சனிக்கிழமை தவிர ஏனையநாட்களில் முகாமைக்காரரைக்காணவேண்டுமாயின் ஏலவே ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும்.

மயிலிட்டி

## காணிக்கைமாதா திருநாள்

மயிலிட்டி, காணிக்கைமாதா திருநாள் நிகழ்மதி 24-ந் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மாசிமாதம் 1-ந் திகதி மாலை வேஸ்பருடனும், 2-ந் திகதி காலை திவ்விய பாடற்பூசையுடனும், அதன்பின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும், சாயரட்சை அன்னதானத்துடனும் சமாப்தியாகும். ஆலய திருப்பணிக்காக ஓடுகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும். தேவமாதாவின்பக்தர்கள் அனைவரும் காணிக்கையாக ஒவ்வொரு ஓடுவாங்கும்படி பரிவாகக் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். கட்டளைச் சுவாமியாரின் அனுமதியின்றிக் கோவில்வளவுக்குள் மெழுகுதிரி விற்றல்கூடாது.

C. F. Margerit, O. M. I.
மயிலிட்டி Act. Parish Prist

## ரூபா 250 பரிசு

மானிப்பாயிலே பலராலும் அறியப்பட்டவரும், இற்றைக்கு 35 ஆண்டுகளுக்குமுன் பலவருடகாலம் மானிப்பாய்ச் சந்தானுள்மாதாகோவில் சக்கிறிஸ்தாமாயிருந்து காலஞ்சென்ற திரு. வி. பிலிப்புப்பிள்ளையின் புதல்வரும், தற்போது அக்கோவில் சக்கிறிஸ்தாமாய் இருந்துவருகின்ற திரு. பி. விசேந்திஎன்பவரின் இளையசகோதரரும், பிரபல வியாபாரிகளான வஸ்தியாம்பிள்ளை, ஆசீர்வாதம், ஞானப்பிரகாசம், செல்வராஸ், யேசுரட்ணம் ஆகியவர்களின் தகப்பனும், றெயில் வேக்காட் ஆகவிருந்து இளைப்பாறிய வருமான பிலிப்மனவல்பிள்ளை இந்த ஜனவரிமாதம் 2-ந் திகதி புதன்கிழமை அதிகாலை ஒட்டுமடம்-மானிப்பாய்த் தெருவில் அதேதிசையால்வந்த கார் ஒன்றினால் அடிபட்டு உடனே உயிர் துறந்தார்.

இந்தக்காரைப்பற்றிய தகவல்களை—நம்பர் முதலியவைகளை ருசுப்படுத்தக்கூடியமுறையில் கீழ்க்காணும் விலாசத்துக்கோ அல்லதுஏதேனும் பொலிஸ் ஸ்ரேஷனுக்கோ கொடுப்பவர்களுக்கு ரூபா 250/ (இருநூற்றைம்பது) பரிசாகக்கொடுக்கப்படும்.

P. M. வஸ்தியம்பிள்ளை

விலாசம்:
பி. ம. வஸ்தியாம்பிள்ளை
பாத்திமாஸ்ரோர்
பருத்தித்துறை

"படிமுறைக் கணிதங்கள்"
3-ஆம்வகுப்புப் படிமுறைக்கணிதம் வெளிவந்து விட்டது !!!
5-ம்வகுப்புப் படிமுறைக்கணிதம் இரண்டாம் பதிப்பு இரண்டு வாரங்களில் வெளிவந்துவிடும்.
விலை
3-ஆம் புத்தகம்—1-40.
4-ஆம் புத்தகம்—1-60.
5-ஆம் புத்தகம்—1-80.
எம். வஸ்தியாம்பிள்ளை & சன்ஸ்
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா?

**1. இலங்கை சுதந்திரம் பெற்றதன்மேல், அதாவது 1948-ம் ஆண்டு தைமாத முதல் திரு. டி. எஸ். சேனநாயக அவர்களைப் பிரதமராகக்கொண்டுள்ள தற்போதைய அரசாங்கத்தால் எத்தனைபேர் நைற்பட்டம் அதாவது சேர்ப்பட்டம் அருளப்பெற்றிருக்கின்றார்கள்? அவர்கள்யார்?**

19 பேர். சேர் ஒலிவர் குணதிலக; சேர் ஐவர் ஜென்னிங்ஸ்; சேர் ஜோண் கொத்தலாவெல; சேர் றிச்சேட் அலுவிகாரை—1948

சேர் அருணசலம் மகாதேவா; சேர் ஆர்தர் விஜயவர்த்தன; சேர் பிரான்சீஸ் மொலமுறே; சேர் ஆர்தர் டி சில்வா—1949

சேர் அலன் றோஸ், கே. சி.; சேர் பிறங் குணசேகர; சேர் டொனத்துஸ் விக்ரோறியா; சேர் கந்தையா வைத்தியநாதன்; சேர் கொலின்ஸ் ஜோண்ஸ்—1950

சேர் எட்வாட் ஐயதிலக; சேர் சிற்றம்பலம் காடினர்; சேர் உக்வத்தை ஜயசுந்தர; சேர் ருஸிக் பறீட்—1951

சேர் வேலுப்பிள்ளை குமாரசாமி; சேர் லலித் இராஜபக்ஸ— தை 1952.

இவர்களுடன் எல்லாமாக இலங்கையிலே தற்போது 27 நைற்பட்டவர்த்தனர்கள் இருக்கின்றார்கள்.

**2. அடுத்த போதுத்தேர்தல் நடந்து அதன்விளைவாகத் தற்போதைய அரசாங்கம் திரும்பவும் அரசு நடத்தவராவிடின் அரசபெருமான் அருளும் இந்த நைற்பட்டங்களும், பிறபட்டங்களும் இலங்கைமக்களுள் எவருக்காவது அருளப்படுமா?**

இல்லை. ஏனெனில், ஏனைய அரசியற் கட்சிகள் எல்லாம் அரசபெருமானின் மகிமைப்பட்டங்கள் வழங்கப்படுவதை நிறுத்தவேண்டுமென்றே தீர்மானித்திருக்கின்றன.

**3. இவர்களேல்லாம் கத்தோலிக்கரே என்பது உங்களுக்குத் தெரியுமா?**

பாஸ்தர்— 19-ம் நூற்றுண்டின் முதன்மை வாய்ந்த விஞ்ஞானியாகப் பிரசித்திபெற்றவர்.

குட்ரென்பேர்க் — அச்சடிக்கும் வித்தையைக் கண்டுபிடித்தவர்.

டன்ரி— உலகின் மகாப்பிரபல கவிஞர்களில் ஒருவர்.

றேயெனஜென்— எக்ஸ்-றெயிஸைக் கண்டுபிடித்தவர்.

லெவெறியேர்— பெரிய வானசாஸ்திரிகளில் ஒருவர். நெப்ரியூன் எனும் கிரகத்தைக் கண்டுபிடித்தவர்.

மோர்க்கனி— தற்கால ரோக நிதானசாஸ்திரத்தின் தந்தையெனப் புகழ்பெற்றவர்.

பதேறுஸ்கி— பியானோ வாத்தியம் மீட்டுவதிலே உலகப்பிரசித்தி பெற்றுருள் ஒருவர்.

மஜெல்லன்— முதன்முதலாக ஓர் கப்பலிலே உலகத்தைச்சுற்றி வந்தவர்.

பாப்பானவரான 15-ம் கிறகோரியார்— தற்காலம் வழங்கிவரும் கலண்டர் அதாவது பஞ்சாங்கத்தை ஆக்கித் தந்தவர்.

கலம்பஸ்— அமெரிக்காவைக் கண்டுபிடித்தவர்.

**4. எட்டாவது என்றி அரசனின்புதல்வனுன ஆறவது எட்வாட்மன்னனின் ஆளுகைகாலத்திலே இங்கிலாந்தல் புறெட்டஸ்தாந்தமதத்தைக் கிறன்மர் புகுத்தியவுடன் விலக்கிவைத்தவைகள் எவை?**

திவ்வியபூசை, திவ்விய பூசையிலே அப்பமும்ரசமும் யேசுக்கிறீஸ்துநாதருடைய திருச்சரீரமும், திருஇரத்தமுமாக மாறிப்போகின்றனஎன்ற வேத சத்தியம், உத்தரிப்பு ஸ்தலம் உண்டென்ற வேதசத்தியம் ஆகியனவும், குருமார் பிரமச்சாரிகளா யிருப்பது, சுத்திகரத்திருநாள், ஆசிநீறு தரிக்கும் தினம், குருத்தோலைஞாயிறு, ஆசிநீர், தேவதாயாருக்கும் அர்ச்சியசிஷ்டர்களுக்குமாகச் செய்யப்படும் செபங்கள், மரித்தவர்களுக்காகச் செய்யப்படும்செபங்கள் முதலாம்அநேக கத்தோலிக்க பத்திஅனுசாரங்கள், திருநாட்களுமே.

## நாளுசங்கதிகள்

—பரிசுத்தபாப்பரசர் ஏதாவது ஓர் திகதியைக் குறிக்கிறவரையிலே இந்தியாவில் திருபாலத்துவ சபைத்தினம் வருடந்தோறும் தைமாசத்தின் கடைசிஞாயிற்றுக்கிழமை அதாவது இவ்வருடம் நிகழும்தைமாசம் 27-ந் திகதிகொண்டாடப்படவேண்டுமென இந்தியகத்தோலிக்க மேற்றிராணிமார்களின் மகாநாடு தீர்மானித்திருக்கின்றது.

—சீனவிலே சூச்சோநகர் மேற்றிராணியாரும், யேசுசபையைச்சேர்ந்த ஓர் அமெரிக்கருமான கொற்றேஆண்டவர் சென்றமார்கழி 5-ந் திகதி காலை 6 மணிக்குப் பாவசங்கீர்த்தனம் கேட்டுக்கொண்டிருந்தபோது வேறும் மூன்று சீனக்குருமாருடன் கைதுசெய்து சிறைவைக்கப்பட்டிருக்கின்றார். இவருடன் இதுவரை சீனவிலே சிறையில்வைக்கப்பட்டிருக்கும் மேற்றிராணிமார்களின்தொகை 24.

—அமெரிக்கபோரான பிரசுரகாராய் விளங்கியிருந்து காலஞ்சென்ற திரு. டபிள்யு. ஆர். ஹேர்ஸ்ற் என்பவரால் துண்டுதுண்டாகப்பெயர்த்து அமெரிக்க ஐக்கியதேசத்துக்குக் கொண்டுபோகப்பட்ட ஸ்பானியதேச சந்நியாசஆச்சிரமம்ஒன்று அங்குள்ள பண்டகசாலைகளிலே 10,712 பெட்டிகளில் இருந்துவருகிறது. சமீபத்திலே இந்தஆச்சிரமம் சின்சினத்திநகரில் அமைக்கப்படும்போல் இருக்கிறது.

—அணுச்சக்தி ஆராய்ச்சித்துறையிலே ருஷியாவைக்காட்டிலும் இன்னுமே எவ்வளவோதூரம் அமெரிக்கா முந்திநிற்பதாகவும், அமெரிக்காவைப் பிரித்தானி அதிகம்நெருங்கிப் பின்தொடர்வதாகவும் 72 வயதுடைய ஜேர்மன் அணுச்சக்திவிஞ்ஞானியானபுரொபெசர் ஏட்ரோ ஹான்எண்ணுகின்றார். பிரித்தானி தன்வசம் பெரியஅதிசயங்களைக் கொண்டிருக்கின்றதென்பதை என்மூலம் அறிந்துகொள்ளுங்களென்றும் அவர்தெரிவித்திருக்கின்றார்.

—பிரித்தானியஅரசின் வெளிநாட்டு மந்திரியாரான திரு. அந்தோனி ஈடன் அவர்கள் சென்ற12-ந் திகதி அமெரிக்காவிலே கலம்பியா சர்வகலாசாலையின் வெள்ளியூபிலிவிழாவில் பேசியபோது: யுத்தஆபத்து ஓரிரண்டுவருடங்களுக்கு முன் இருந்ததைவிட இப்பொழுது குறைந்துவிட்டதென நான் நம்புகிறேன் எனக்கூறியிருக்கிறார்.

—உலகசரித்திரத்திலேயே முதன்முறையாக அணுச்சக்தியானது, மின்சாரவிளக்குகளுக்கும், யந்திரங்களை இயக்குவதற்கும் வேண்டிய மின்சாரசக்தியை உற்பத்திசெய்ய உபயோகிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க அணுக்சக்திக்கம்மிஷன் அறிவித்திருக்கிறது.

—பிறதேசயுத்தங்களில் ஈடுபட்டுள்ள அமெரிக்க முதியபோர்வீரர்களின் சங்கமானது நியூயோக்நகரிலே–வால்வீதியில் 12,000 சனங்களைக் காப்பதற்கென்று நிர்மாணிக்கப்பட்டுள்ள அணுக்குண்டுப்பாது காப்பு உறைவிடம்ஒன்றை பத்துலட்சம் டலர்செலவிட்டுக்கட்டத் திட்டம்போடுகிறது.

—பிரித்தானிய அரசின் "வலியண்ற்" எனப்பெயரிய முதலாவது ஜெற்அணுக்குண்டுவிமானம் பூண்மத்நகருக்கருகே தனது எஞ்சின்களுள்ஒன்றில் தற்செயலாக அக்கினிபற்றிக் கொண்டகாரணமாக நிலத்தில்மோதிவிழுந்து சேதமடையலாயிற்று. இந்தவிமானம் மணித்தியாலம் 500 மைல் வீதம் பறந்துசெல்லக்கூடிய"கன்பெறு" விமானத்திலும் மிகவேகமாகச் செல்லக்கூடியது.

## பொதுவர்த்தமானம்

### சலதோஷமும் பரிகாரமும்

தடிமன்என்று அறியப்படுகின்ற சலதோஷத்தைத் தடுக்கும்முறை, வந்துவிட்டால் அதைநீக்கும்முறை, மற்றவர்களுக்குத் தொற்றுதபடி ஒழுகும்முறை ஆகியனசில அமெரிக்க அரசாங்க சுகாதாரப்பகுதியாரால் வெளியிடப்பெற்றிருக்கின்றன. அவற்றைக் கீழேகாண்க.

தடுக்கும்முறை: சலதோஷமுடையவர்களுக்குக் கிட்டப்போவதை இயன்றளவு தவிர்க்கவேண்டும். சலதோஷம் பரவியிருக்கிற காலங்களில் சனக்கூட்டங்களுள் செல்லக்கூடாது. உணவுக்குமுன் கைகளை நன்றாய்க் கழுவவேண்டும். சலதோஷமுடையவர்கள் உபயோகித்தபாத்திரம், துவாய்முதலியவைகளை உபயோகிக்கக்கூடாது.

நீக்கும்முறை: சலதோஷம் உண்டானதுமுதல் இயலுமானால் இரண்டு மூன்றுநாட்களுக்கு வீட்டில்நின்று ஆறுதல்எடுக்கவேண்டும். சுகமாய்த் தோன்றுகிறஅளவுக்குத் தேகம் சூடாயிருக்கவேண்டும். கைக்குட்டை முதலியவற்றை மூக்குத்துடைக்க உபயோகிக்கவேண்டும். சளி நீக்கும்பொழுது இருதுவாரங்களாலும் ஒரேமுறையில் மெதுவாகநீக்கவேண்டும். தண்ணீர்ப்பதார்த்தங்கள் அதிகம் குடிக்கவேண்டும்.

தொற்றுமற்தடுக்கும் முறை: மூக்கிலிருந்து அல்லது வாயிலிருந்துவரும் நீர், சளிமுதலியவற்றில் சலதோஷக் கிருமிகள் இருக்கும். முதல்இரண்டு மூன்று நாட்களுக்கு மிகஅதிகமாயிருக்கும். இவைகள் மற்றவர்களண்டைக்குச்செல்லாது தடுக்கவேண்டும். தனியிடத்தில் படுக்கவேண்டும்.

### அமைதியை நிலைநாட்டுமா?

"மூன்றுவது மகாயுத்த அபாயம் மக்களைத்தொடர்ந்து அச்சுறுத்திவருகின்றது; இந்தஅபாயம் அரசாங்கங்களின் கொள்கைகளை நிர்ணயிப்பதுடன் அநேகநாடுகளுக்குப் பொருளாதாரச் சுமையாயிருக்கும். ஆயுதசுவீகாரணத்துக்கும் காரணமாகின்றது; உலகில் யுத்தத்தைவிரும்புகிறவர்கள் எவரேனும் இல்லை; ஆனால், அச்சத்தினலும் பயமுறுத்தல், பதிலுக்குப்பதில் செய்தல், விருப்புவெறுப்பாலும் அரசாங்கங்களின் கொள்கைகள் நிலவுகின்றன. இதற்கெல்லாம் ஒரேயொரு வழி உண்டு. அதாவது ஐ.நா. ஸ்தாபனம் எந்த நோக்கமாக ஸ்தாபிக்கப்பட்டதோ அதேநோக்கத்துடன் அதனைப் பணிபாற்றச்செய்யவேண்டும்; அவ்விதம் செய்ய முடியும்" என்று ஐ. நா. பொதுக்காரியதரிசி திரு. டிறிக்—விலீ தமது வருடாந்த விசேஷ அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார்.

### புதிய நாஸிய இயக்கம்

நூறுபேர் முதல் ஆயிரக்கணக்கானோர் வரையிலே பல்வேறு வகைப்பட்டதொகையிலும் அங்கத்தினரைக் கொண்ட சட்டவிரோதமான முப்பது நாஸியசங்கங்கள் ஜேர்மனியில் இருந்து வருவது கண்டறியப்பட்டு, அதனால் மேற்குப்பேர்லின் நகரிலுள்ள ஜேர்மனிய பாதுகாப்பு அதிகாரிகளும் நேசதேச பாதுகாப்பு அதிகாரிகளும், ஒன்றுசேர்ந்து அந்தரங்கமாக விசாரணைநடத்தி வருகின்றார்கள். இந்த நாஸியஇயக்கத்தைப் பின்பற்றுவாரின் தொகை 15,000 பேர் வரையிலென மதிப்பிடப் பட்டிருக்கிறது. கிழக்கு ஜேர்மன் கம்யூனிஸ்தர்களே இந்த நாஸிய குழாங்களுக்குப் பணஉதவி செய்து அவைகளைச் சதிவேலைகளிற் தூண்டிவருகின்றார்களாம். அவர்கள் பேர்லின் நகரிலுள்ள நாஸிய சங்கங்கள் மூலமாகவே மேற்குஜேர்மனியிலுள்ள நாஸிய சங்கங்களுக்குப் பண உதவி செய்துவருகின்றார்களாம்.

## காவலூர் வாலிபர்சங்கம்

ஊர்காவற்றுறை வாலிபர்சங்கத்தின் 5-ம் கூட்டம் இம்மாதம் 13-ந்திகதி காலை 10.30 மணியளவில் திருஇருதய வாசிகசாலையில் நடந்தேறியது. பெரும்பான்மையான அங்கத்தினர் சமுகமாயிருந்தனர். பின்வரும் பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேறின.

1. தொற்று நோயாளரை அயலூர்களிலிருந்து ஆயப்பாதையின் மூலம் இங்கிருக்கும் தொற்றுநோய் ஆஸ்பத்திரிக்குக் கொணடுவருவதைத் தடுக்கவேண்டும். தொற்று நோயாளரின் வருகையால் இவ்வூர் மக்கட்கு ஆபத்து நேரிடக்கூடும. ஆகவே, அதைத்தடுப்பதற்காக இச்சங்கத்தின் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்படவேணடும்.

2 இவ்வூர் வாலிபர்கட்குக் கல்வி புகட்டுவதற்காக ஓர்பிரத்தியேக இராப்பாடசாலை நடத்தவேண்டும். ஆசிரியர்களும், இன்னும் படித்தவாலிபர்களும் அதன் ஆசிரியர்களாகக் கடமையாற்றுவார்கள்.

3. இம்முறை சுதந்திரதின விழாக் கொண்டாட்டத்தைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். அதில்வாலிபர்கள் முக்கியபங்கு எடுப்பதுமன்றி நாட்டுமக்கட்குச் சுதந்திரத்தைப்பற்றியும், அது என்ன என்பதைப்பற்றியும் புகட்டவேண்டும்.

ச. யோசவ், காரியதரிசி.

## பிரியாவிடை வைபவம்

பாப்பாமோட்டைக் கத்தோலிக்க பாடசாலைத் தலைமையாசிரியராயிருந்து கடந்த நான்குவருடமாகச் சிறப்பாகத் தொண்டாற்றிப் பாடசாலையையும், கிராமத்தையும் ஓர்படி முன்னேற்றிவைத்த ஆசிரியர் எஸ். அந்தோனிப்பிள்ளை அவர்கள் உயிலங்குளம், கத்தோலிக்கபாடசாலைத் தலைமைஆசிரியராக மாற்றப்பட்டதைஅறிந்து பாப்பாமோட்டைவாசிகளும், அயற்கிராமவாசிகளும் கவலைகொண்டவர்களாய்ச் சாதிசமய பேதம்பாராது அவருக்கு ஓர்சிறந்த பிரிவுஉபசாரம் நடத்தினார்கள். இவர் எமது பாடசாலைக்குத் தலைமைஆசிரியராக வந்தபின் எம்மூர் அடைந்துள்ள நன்மைகளோ, பொன் அட்சரங்களால் பொறிக்கப்படத் தக்கனவாகும். அப்போது ஒரு ஆசிரியரைக் கொண்டிருந்தபாடசாலை இப்போது மூன்று ஆசிரியரைக் கொண்டிருப்பதும, அரசினருடன் வாதாடி ஓர்இலவச பால்நிலையம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதும், ஓர்உபதபாற்கந்தோரும், தெலிபோன்நிலையமும், ஓர் றேடியோ நிலையமும் அமைக்கப்பட்டிருப்பதும், சனசமூக முன்னேற்றசங்கங்கள் நிறுவப்பட்டிருப்பதும் இவரது அயரா முயற்சியாலேயாகும். அம்மட்டா! இவரின்பிரயாசையாலே பாடசாலையில் உயர்ந்த வகுப்புகள் ஏற்பட்டுள்ளன. மாணவர்கள் விளையாட்டுப் போட்டியிலும், ஞானோபதேசப்போட்டியிலும் கலந்து சமயஅறிவில்வளர்ந்து, அவர்களிடையே செபமாலைப்பத்தியும் நிலவியுள்ளது. மேலும் இவரது இன்பமொழிகளும், சமயோசிதபுத்திகளும், வாக்கலங்கார சொற்பொழிவுகளும் என்றுமே எமதுசெவிகளில் தொனிப்பனவாகும். இப்பெரும்பண்புநிறைந்த ஆசிரியருக்குச் சென்ற 5-ந் திகதி கிராமவாசிகள்திரண்டு நடத்திய பிரிவுபசாரத்தின்பின் பாதைநீளம் பலரும் வெற்றிலைபாக்குத் தெட்சணைவைத்து மரியாதைசெய்துநிற்க, மாட்டுவண்டிகள் பவனியாகச்செல்ல, மழையையும் பாராது மக்கள் புடைசூழ்ந்துசென்று புதிய பாடசாலைவிடுதியில் அவரைச் சேர்த்துக் கரகோஷம்செய்து திரும்பினார்கள். ஆசிரியர்அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து பலகிராமங்களை முன்னேற்றிவைப்பாராக! சுபம்.

— ஓர் மாணவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது

அன்பார்ந்த சகோதரங்களே!

செல்வனின் கதையை வாசித்து விட்டுப் பெரிய பெரிய கேள்விகள் எல்லாம் நீங்கள் காணுகிறவர்களிடம் கேட்கிறீர்களாம். சிலர் ஒரே கேள்விக் குறியாய்க் காணப் படுகிறீர்களாம். அப்படி அறிவைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

கால வண்டி என்னும் கதை எவ்வளவு ஆழமான கருத்துக் கொண்டது என்று வாசித்தால் விளங்கும்.

சகோதரங்களே! விடுதலை காலத்தில் நீங்கள் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த படியால் அதிகம் எழுதவில்லைப் போலும். உங்கள் கடிதங்களையும், இனிமையான கட்டுரைகளையும் ஆவலாய் எதிர்பார்க்கிறேன்.

உங்கள் அன்புள்ள
அண்ணா.



## பூனையைப் பார்!

(ஜெயம்)

(1) பாலா இந்தப் பூனையைப் பார்
பதுங்கிப் பதுங்கி எலி பிடிக்கும்
காலால் நடந்து வருகுது பார்
காதிற் சத்தம் கேளாது.

(2) பந்தை உருட்டி விளையாடும்
பாலைக் குடித்துக் களையாறும்
சொந்தக் காரர் தமைக் கண்டால்
சுற்றிச் சுற்றி ஓடிவரும்.

(3) வட்ட வட்டக் கண் (இ) ரண்டு
வளைந்த நகங்கள் பலவுண்டு
பட்டுப் போலக் காலுண்டு
பஞ்சைப் போல மேலுண்டு.

(4) அரத்தைப் போல நாக்குண்டு
அரிவாள் போலப் பல்லுண்டு
பழத்தைப் போல மூக்குண்டு
பாம்பைப் போல வாலுண்டு.

(5) உண்ட பின்னர் வாய்கழுவும்
உசித பழக்கம் இதற்குண்டு
கண்டே இந்தப் பழக்கத்தைக்
கற்றிட வேண்டும் பாலகனே.

## நான் யார்?

1

எனக்கு வயது பதின்மூன்றாய் இருந்தது. சௌந்தரிய வதி. அரசன் தன்னை மணம் புரியும் படி என்னைக் கேட்டான். நான் என் பரலோக பத்தாவுக்கு என்னைக் கையளித்து விட்ட படியால் மறுத்தேன். என்னை நெருப்பில் இட்டான். நான் இளகவில்லை. வாளால் வெட்டும்படி மழுவனுக்குக் கட்டளை பிறந்தது. என் பெயர் செம்மறிப்புருவை என்பார்கள்.

2

என் சொந்த நாடு பிரான்சு. நான் ஒரு மேற்றிராணியார். அநேக பதிதரை மனந் திருப்பினேன். மினவுதற் கன்னியர் சபையைச் சாந்தாள் அம்மாளுடன் அடியிட்டேன். நான் எழுதிய பத்தி நெறிப் பிரவேசம், தேவ நேசம் என்னும் புத்தகங்களை வாசித்திருப்பீர்கள். நான் கத்தோலிக்க எழுத்தாளரின் பரலோக பாதுகாவலர்.

3

நான் சிறுவரின் தோழன். தூறின் பட்டணத்தில் ஏழைப் பிள்ளைகளுக் கென்று "ஒறற்ரோறி" என்னும் கூட்டத்தைத் தொடங்கினேன். சலேசியன் சபைக் குருக்களையும், தேவபராமரிப்பின் கன்னியாஸ் திரிகளையும் ஏற்படுத்தினேன். இச் சபைகள் உலகம் முழுவதிலும் பரம்பி யிருக்கின்றன.

4

நான் பழுத்த கிழவன். உலக இரட்சகரைக் காத்திருந்தேன். கோயிலில் அவரைக்கண்டேன். கையில் ஏந்தினேன். பேருவகை [illegible] பாடினேன்.

## தெரிந்தெடுங்கள்

1

ஆதாமும் ஏவாளும் விலக்கப் பட்ட கனியைத் தின்றபின் (சந்தோஷப்பட்டார்கள்.
வெட்கப்பட்டார்கள்.
பெருமை அடைந்தார்கள்).

2

இவ்வாரத்திய சுவிசேஷத்தில் யேசுநாதர் (கப்பர்னவும், கானா, யெருசலேம்) ஊரிலே நூற்றுக்கு அதிபதியாய் இருந்தவனுடைய (தாயை, ஊழியனை, மருமகனை) சொஸ்தப்படுத்தினார்.

3

அர்ச். தொன்பொஸ்கோ தாமே நல்வழியிலும், தேவ நேசத்திலும் பயிற்றி வந்த (கருதினலுக்கு, அந்தோனியோவுக்கு, தொமினிக் சவியோவுக்கு) பரிசுத்த வருடத்தில் முத்திப்பேறு பெற்ற பட்டஞ் சூட்டப்பட்டது.

4

குழந்தை யேசுவை (ரோமை, சம்பேதுரு வானவர் ஆலயத்திலே, யெருசலேம் தேவாலயத்திலே) காணிக்கை யாக்கின பொழுது (அர்ச். சூசையப்பர், கைப்பாஸ், பெரியகுரு, சிமியோன் தீர்க்கதரிசி) சருவேசுரனுக்குத் தோத்திரஞ்சொன்னார்.

## காலவண்டி

சாவதானமும், பாரகண்டிதமும் ஓர் தந்தையின் அருமைப் புத்திரர். தந்தையார் தன்மக்கள் இருவரையும் அழைத்து: "மக்காள்! இதோ உங்களை ஓர் சுற்றுப் பிரயாணம் செய்ய அனுப்பப் போகிறேன். இவ் வண்டிகளைப் பாருங்கள். ஒரே திறந்த ரதங்கள். யன்னல்கள், கதவுகள் எதுவுமே கிடையாது. உள்ளே ஒவ்வோர் பளிங்குஅறைகளும், ஒவ்வோர் ஸ்நான அறைகளும் இருக்கின்றன. நீங்கள் பிரயாணம் பண்ணும் போது இந்தப் பளிங்கு அறைகளில் மாத்திரம் இருந்தால் உங்களுக்கு ஒரு கெடுதியும் உண்டாகாது. வெளியில் நின்றாலோ அடிக்கும் காற்று—பெய்யும் மழைத் தூறல் தூவாணம்—எறிக்கும் வெய்யில்—பனி இவை உங்களைத் தாக்கும். உங்கள் ஆடைகளும், மேனியும் அழுக்கடைந்து நீங்கள் கோலமே உருமாறிப் போவீர்கள். அப்படி நேருமிடத்து அதோ அந்த ஸ்நான அறைகளில் உள் நுழைந்து உங்களைத் துப்பரவு செய்து கொள்ளுங்கள். உங்கள் வண்டி பல ஸ்தானங்களைத் தாண்டி ஓடிக்கொண்டிருக்கும். ஆனால், நீங்கள் நினையாத நேரத்தில் அவை நிறுத்தப் படும். அவ்வேளைகளில் நீங்கள் இப்போ இருக்கும் நிலையில் தூய்மையாகத் துப்பரவாக இருக்க வேண்டும். அப்படி யல்லாவிடின் உங்களைக் கழித்துத் துரத்தி விடுவேன். அப்படித் துரத்தப் பட்டவன் என் ஆஸ்தி பூஸ்திகள் எதற்குமே பாத்திர மாகான். சுகமே போய் வாருங்கள் பிள்ளைகளே! என்று வழி அனுப்பி வைத்தார். மக்களும் புறப் பட்டனர். சாவதானம் தன் தந்தை வண்டியை எப்போ நிற்பாட்டுவரோ? "அப்பொழுது நான் இப்படியே இருக்க வேண்டுமே! இந்தப் பளிங்கு அறையில் பத்திரமாய் இருந்து கொள்ளுவோம்!" என்று அதில் இருந்து விட்டான். வெளிக் காட்சிகளையும், படாடோபங்களையும் கண்டு ஒரோர் [illegible] வெளியே வருவான். உடனே [illegible] நினைத்தவனாய் ஸ்நான அறைக்கு ஓடோடியும் சென்று தன்னைத் துப்பரவு செய்து கொண்டு, பளிங்கு அறைக்குள் சென்று அமர்ந்து விடுவான்.

ஆனால், பாரகண்டிதமும் இருக்கிறானே, அவன் போக்கு வித்தியாசம். பளிங்கு அறையில் சும்மா இருப்பது என்றால் அவனுக்குப் பிடிக்கவில்லை. வெளியே எத்தனை விதம் விதமான காட்சிகள்! அதோ காட்டு மரக் கிளைகளில் மந்திகளின் இனியசல்லாபங்கள். மயில்களின் சிங்கார நடனங்கள். குயில்களின் இன்னிசைக் கீதங்கள். மான்களின் மருண்ட பார்வைகள். இவைகளைக் காதார—மனதார—ரசிப்பதை விட்டு அந்தப் பளிங்கு அறையில் குந்திக் கொண்டிருப்பது என்றால் லேசான கருமமா? பாரகண்டிதம் வெளியே வந்தான். காற்று அவன்மேல் மோதி அடித்தது. தூசிகளும், மணல் மணிகளும் அவன் தலையிலும், முகத்திலும் படிந்து கொண்டன. மழைத்தூறல் அவன் உடையை நனைத்து விட்டது. உடை கசங்கித் தூசி படிந்து அழுக்கேறி விட்டது. வெய்யில் அவன் தங்க மேனியைக் கறுக்கச் செய்து விட்டது. ஆயினும் இந்த இன்பக் காட்சிகளை விட்டுப்போக அவனுக்குப் பிரியமே இல்லை. "வண்டி ஓடிக் கொண்டு தானே இருக்கிறது. தந்தை இப்போது எங்கே வரப் போகிறார்? இன்னும் சில ஸ்தானங்கள் கழியட்டுக்கும். துப்பரவு செய்யலாம்" என்று இருந்து விட்டான். இருந்தாற் போல் வண்டி நிற்பாட்டப் பட்டது. தந்தையார் உள் நுழைந்தார். "இதென்ன பாரகண்டிதம் உன்கோலம். ஆளை அடையாளமே தெரியவில்லை. நீ என் ஆஸ்தி பூஸ்திகளுக்கு லாயக் கற்றவன்" என்று அவனைக் கடிந்து கொண்டு ஓர் அக்கினிச் சூளையில் வீசி விட்டார். பின் சாவதானத்தின் வண்டியை நிற்பாட்டிப் பார்த்தார். சாவதானம் பளிங்கு அறையில் தூய்மையானவனாய்—சுத்தமானவனாய் இருந்தான். "வாடா அருமை மகனே. இதோ! என் ஆஸ்தியைச் சுதந்தரித்துக் கொள்" என்று அவனைக் கட்டி அணைத்துக் கொண்டார்.

பிள்ளைகளே! கடவுள் நம்மைச் சீவிய வண்டியில் ஏற்றி இருக்கிறார். இவ்வண்டி பந்தோபஸ்து அற்றது. உலக மாய்கைகளும், படாடோபங்களும் எங்கள் ஆன்மாக்களை உரு வழித்து விடும். அந்நேரங்களில் எல்லாம் நாம்தேவதிரவிய அனுமானங்கள்ஆகிற ஸ்நான அறைகளை நாட வேண்டும். பளிங்கு அறை என்பது தெய்வ சந்நிதானம்! நாம் தெய்வ சந்நிதான அறையில் இருந்தால் உலக ஏமாற்றுதல்களில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம். சீவியவண்டி பல ஸ்தானங்களைத் தாண்டிச் செல்லுகின்றது. ஒவ்வோ ஸ்தானமும் ஒவ்வோர்வருஷம். எந்த ஸ்தானத்தில், அதாவது எந்த வருஷத்தில் நம் சீவிய வண்டி நிற்பாட்டப் படுமோ தெரியாது. இதோ ஓர் புது ஸ்தானத்தில் — அதாவது புது வருஷத்தில்—நம் சீவிய வண்டி ஓடத் தொடங்கி இருக்கிறது. சிலவேளை இந்தஸ்தானத்திலேயே நம் வண்டி நிறுத்தப்படலாம். அப்படி நிறுத்தப் படுங்கால் தம்பி! நீ சாவதானத்தின் நிலையில் இருப்பாயா! அப்படி இருந்தால் நீ பாக்கியவான். அல்லது பாரகண்டிதத்தின் நிலையில் இருப்பாயா?

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ் சபை

இச்சபையின் மாதாந்த கூட்டம் இம்மாதம் 25-ந் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 5 மணியளவில் அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். மாசிமாதம் பரிபூரணபலன்கள் அடையக்கூடிய நாட்கள் பின் வருமாறு:— 1, 2, 4, 5, 14, 19, 22, 25. மேலும் 2-ந் திகதி பொதுப் பாவமன்னிப்பு அடையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## அணுச்சக்திக் கட்டுப்பாடு பற்றிய சோவியற் யோசனை

— பரிஸ்

அணுச்சக்தி ஆயுதஉற்பத்தி, கட்டுப்பாடு இரண்டையும்குறித்துச் சோவியற் அரசு வெளியிட்டுள்ள 'புதிய' யோசனையை அமெரிக்கஅரசு "மிகக் கவனமாக" ஆராயும். தவிர, ருஷிய யோசனையைப்பார்த்து அமெரிக்கா "இராத்திரி முழுதும் தூக்கத்தைக் கெடுத்துக்கொண்டு சிரிக்காது" என்று அமெரிக்கபிரதிநிதி ஏர்ணெஸ்ற் கிறுஸ் கூறுகின்றார். சென்ற கார்த்திகையிலே அமெரிக்கா, பிரித்தானி, பிரான்ஸ்மூன்றும் கூடிச் சேர்ந்து சமர்ப்பித்த ஆயுதக்குறைப்பு யோசனையைச் சென்றவாரம் ஐ. நா. பொதுமன்றம் அங்கீகரித்தது. முதலிலே இந்தமுக்கூட்டுயோசனையைக் கேட்டுவிட்டு ருஷியபிரதிநிதி விஷின்ஸ்கி நையாண்டிசெய்தார். ஜனாதிபதி ட்றூமன் தமதுவருடாந்தச்செய்தியில் குறிப்பிட்டதுபோல, விஷின்ஸ்கியின் பரிகாசத்தைக்கேட்டு உலகெங்கணுமுள்ள சமாதான அபிமானிகள் சினங்கொண்டார்கள். "இக்கூட்டுயோசனையைக்கேட்டு எனக்கு இராத்திரிமுழுதும் தூக்கம்வரவில்லை. சிரிப்பு வந்தது" என்றார் விஷின்ஸ்கி.

கடைசியாக இப்போது ருஷியா கிளப்பிவிட்டுள்ள யோசனையைக் குறித்து — இதிலொன்றும் விஷின்ஸ்கி கூறுவதுபோல 'புதிது' ஒன்றுமில்லை. பழையபல்லவிதான் — அவர் கூறுவதாவது: "ஐ. நா. பொதுமன்றம் ஏற்கனவே தீர்மானித்துள்ள விஷயங்களை மீண்டும் குழப்பநிலைக்குக் கொண்டுவர ருஷியாமுயலும்பட்சத்தில், அதை அமெரிக்கா வன்மையாக எதிர்க்கும். ஏனெனில், ருஷியாவின் அத்தகைய முயற்சியானது ஐ. நா. பொதுமன்றம் முன்னுக்குவைத்தகாலைப் பின்னுக்கு இழுக்கச்செய்யும் முயற்சியாகும். அமெரிக்காவின் இப்போதையமுயற்சி தற்காப்புக்கான முயற்சியேஎன்பதை அவர்ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

## ஜனாதிபதிட்றூமன் விளக்குகிறர்

— வாஷிங்டன்

சமாதானநீடிப்புக்கான சுதந்திர உலக முயற்சிகளில் தனதுபங்கை அதிகரிக்கச்செய்வதும், உள்நாட்டிலே பிரசைகளின் சேமவாழ்வை இன்னும் உன்னதமாக்குவதுமே இன்றைய அமெரிக்காவின் இருமுக்கிய பணிகள் என்று ஜனாதிபதிட்றூமன் கூறியிருக்கிறார். அமெரிக்கபாராளுமன்ற இருசபைகளும் அடங்கிய கூட்டத்தில் அவர்இன்று தமதுவருடாந்தச் செய்தியைவெளியிடுகையில், சென்றஆண்டில் அமெரிக்காபுரிந்த சாதனைகளையும், நிகழும்வருடத்தில் காங்கிரஸ் இயற்றுமென நம்புகின்ற சட்டதிட்டங்களையும் தொகுத்துரைத்து, உலக சமாதானம் நீடித்துநிலவச்செய்வதே நிகழ்வருடத்தின் ஆக்கவேலைகளுக்கு ஆணிவேர்என எடுத்துக்கூறி, இன்றைய உலகத்தைப் "பயங்கர ஆக்கிரமிப்பு" பயமுறுத்திக்கொண்டிருப்பதை விளக்கிக்காட்டி, "சமாதானத்தை நிலைநிறுத்துவதே — என்னவிலை கொடுத்தாகிலும் அல்ல; விடுதலையையும், நீதியையும் தழுவிய சமாதானத்தை நிலைநிறுத்துவதுதான் — அமெரிக்காவின் லட்சியம்" எனக்கூறினார்.

சமாதானமுகமாக 1951-இல் அடைந்த முன்னேற்றத்தைக்குறித்து அவர் தெரிவித்ததாவது: "சுதந்திர உலகத்தின் ஒருமைப்பாட்டையும், வல்லமையையும் நாம் வளர்த்திருக்கிறோம். அப்படிச் செய்துகொண்டிருக்கையில், ஒருபுறம் உலகயுத்தத்தையும், மறுபுறம் தாமதம்பண்ணுவதையும் தவிர்த்திருக்கிறோம். சென்ற ஆண்டில் கம்யூனிஸ்தஆக்கிரமிப்பு புறமுதுகுகாட்டும்படி செய்யப்பட்டது. அமெரிக்காவின் இராணுவபலம் அதிகரித்தது. ஐக்கியநாடுகளின் ஆற்றல் மேலும்ஓங்கியது. பொதுவாகச் சமாதானத்துக்கும், விடுதலைக்கும் ஏதுவானவாய்ப்புகள் உலகின் பலபாகங்களிலே பெருகியுள்ளன. அதேசமயத்தில் நாம் சமாளிக்கவேண்டிய புதிய பிரச்சினைகளும் உண்டாகியுள்ளன.

தூரகிழக்கில் கம்யூனிஸ்த எதேச்சாதிகாரத்தின் அபாயஇருள் பலநாடுகளைச் சூழ்ந்துள்ளது. எனினும் நல்லது, கெட்டது இரண்டையும் மொத்தக்கணக்குப் பார்க்கும்போது, சமாதானபாதையில் அமெரிக்கா உண்மையானமுன்னேற்றம் கண்டிருக்கிறது.

நிகழும்ஆண்டில் நடத்தவேண்டிய காரியங்களிலே அமெரிக்கமக்களின் முழுக் கவனத்தை ஈர்த்திருப்பது கோறியாப்பிரச்சினையே. போர்நிறுத்த உடன்பாடு காணும்வரை — ஐ. நா. கொள்கைகளுக்குஏற்பச் சமரசம் காணும்வரை — ஆக்கிரமிப்பை அடக்கிக் கோறியாவின்பந்தோபஸ்தை நிலைநாட்டும்வரை — அங்கே அமெரிக்கா தொடர்ந்துபோராடவும், ஆக்கவேலை செய்யவும் உறுதிகொண்டிருக்கிறது.

யப்பானிய சமாதான உடன்பாடு, பசிபிக்நாடுகளுடன் செய்துகொள்ளப்பட்டிருக்கும் பரஸ்பர பந்தோபஸ்து உடன்படிக்கைகள், வடஅத்திலாந்திக் ஒப்பந்தஸ்தாபனத்துடன் துருக்கியையும், கிறீஸையும் இணைப்பதாக ஒப்புக்கொண்டிருப்பது ஆகிய இவற்றிற்கு அனுகூலமான நடவடிக்கையைத் துரிதமாகஎடுக்குமாறு செனற்சபையோரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"ஆசியாவில் கம்யூனிஸ்த ஏகாதிபத்தியமானது கோடிக்கணக்கானோரைத் தினமும் பயமுறுத்திவருகிறது. அந்தமக்கள் சுயேச்சையுடன் வாழும்பொருட்டு இராணுவஉதவி அவசியப்படுகிறது. அமெரிக்காவில் தற்காப்பு முஸ்திப்பு சீராகப் பலப்பட்டுவருகிறது. அவசியம்ஏற்பட்டால், அதாவது வேறுவழியில்லைஎன்று ஏற்படுங்காலையில் — வலுச்சண்டைக்குஅல்ல — தனது சக்தியையும், சாதனங்களையும் உடனுக்குடன் திரட்டும்நிலையில் அமெரிக்காவைவைத்திருப்பதற்கே இப்போதைய தயாரிப்புத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது."

## தங்கத்தின் விலை

இலங்கை மத்தியவங்கி தங்கத்தின் விலையை ஒருஅவுன்ஸ் 240 ரூபாவாக நிர்ணயஞ்செய்து அறிவித்தது முதல் தங்கவிலை குறையத்தொடங்கி யிருக்கிறது. இதன்படி ஒருபவுண் நிறையுள்ள தங்கத்தின்விலை 62 ரூபாவரையிலாகும். இந்தவிலை இம்மாதம் 12-ந் திகதிமுதல் நடைமுறைக்குவந்து தற்போது ஒருதங்கப்பவுணின் விலை 84 ரூபாவாகவும், ஒருபவுண் நிறையுள்ள தங்கத்தின்விலை 71 ரூபாவாகவும் குறைந்துவிட்டது. இன்னும் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## கைத்தொழில் மந்திரியார்

கைத்தொழில்-கடற்தொழில் மந்திரியாரான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் ஆசியதூரகிழக்குப் பொருளாதார மகாநாட்டில் கலந்துகொள்வதற்காகச் சென்ற செவ்வாய்க்கிழமை காலை விமானமூலம் றங்கூனுக்குச் சென்றிருக்கிறார். அவர் திரும்புகிறவரையிலே நீர்கொழும்புப் பிரதிநிதியான திரு. எச். டி. ஈ. சிறிவர்த்தன அவர்கள் ஜக்றிங் கடற்தொழில்—கைத்தொழில் மந்திரியாகக் கடமைபார்த்துவருவார்.

## ஈனந்தீர்ந்த கூனற்சைமன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்களுடன் பயணம்செய்தவர்களே அவர்களென்பது புலனாயிற்று. அந்த அம்மையார் கூறியமொழிகள் அவன் ஞாபகத்தில்வந்தன. எல்லாம் மறந்தான். இருமுழந்தாளில் விழுந்தான். திருக்குழந்தையைத் தெண்டனிட்டுப் பணிந்தான். மீண்டும் "புதுமை! புதுமை! இதோ வல்லபதேவன் நல்லது செய்தார்" என்றான். தனது கூனல் நீங்கப்பெற்றவனாய்த் தன்னுடைய எளியமன்றாட்டை அன்புடன்கேட்டுத் தனது கூனல்முதுகின் — ஈனந்தீர்த்த அற்புதத்தை நினைந்துநினைந்து உள்ளம் உருகுகின்றான். மீண்டும் முழந்தாட்படியிட்டு "ஓ! என்தேவனே! நீரே பெரியவர்; உமதுஇரக்கம் முடிவில்லாதது; உலகத்தை இரட்சிக்க எழுந்தருளிவந்தமெசியா துதிக்கப்படுவாராக" என்று பாடிக்கொண்டேஎழுந்து தனது பாட்டன் ஒசியஸ் இருக்குமிடம் நோக்கிவிரைந்து செல்லுகின்றான்.

சென்றதும் ஆனந்தம் பொங்கப் பரபரப்புடன் பாட்டா! இதோ என்னைப் பாருங்கள். புதுமை! புதுமை! மெசியாபிறந்தார். எனக்குச் சொஸ்தம்தந்தார். எனது கூனல்பறந்தது. ஈனந்தீர்ந்தது. எங்கள் நல்லதேவனுக்குத் தோத்திரம்" என்றான். இதைக் கேட்டுத் திகைத்துமலைத்துப்போய் நடுக்கமுற்ற தனது பாட்டனையும், மற்றேனையோரையும்நோக்கி: "என்ன நீங்கள் என்னைநம்பவில்லையா? பாருங்கள்" என்றே தனது முதுகினைத் திருப்பிக்காட்டினான். அவர்கள் பிரமிப்போடு அவன் முதுகைத்தடவித்தடவிப் பார்த்துவிட்டு: "சைமன் நீ எப்படிச் சுகப்பட்டாய்? சொல்" என்றுகேட்க, அவனும் வானவர்கீதம் பாடியதும், வாக்குப்பண்ணப்பட்ட மெசியாவானவர் சிறுகுழந்தையாகப் பிறந்து புல்லணையில் வளர்த்தப்பட்டுக் கிடந்ததும், தங்களுடன் பயணஞ்செய்த அம்மையாரும் மாதவரும் இருபுறத்தும் முழந்தாளிட்டு வணங்கியதும், ஆகாயவெளியிலே வானவர் கீதம்பாடக்கேட்டுத் தானும்பாடிஆடியதும், அற்புதமாகக் கண்ணொளிபெற்றுத் தானும் அத்திருக்குழந்தையைத் தரிசித்து வணங்கியதும், அப்போது தன்னுடைய கூனல்நீங்கி—ஈனந்தீர்ந்ததுமான வரலாறெல்லாம் எடுத்துரைத்தான்.

இதனைக்கேட்டுநின்ற பாட்டனார் "சரிதான்; காலாகாலமாக உலகெலாம் எதிர்பார்த்திருந்த மெசியாபிறந்துவிட்டார்; அந்த எங்கள்நல்லதேவனுக்குச் சதாகாலமும் புகழும் தோத்திரமும் ஆகுக! அத்திருக்குழந்தைசெய்த இந்தப்புதுமையை விளங்கிக்கொள்ள எனக்குஆற்றல் இல்லை; சைமன்! அந்த அம்மாள் உண்மையாகவே தேவனின் தாய்; அந்தமுனிவரோ அவரது கைத்தாதை; எல்லோரும் முழந்தாளிட்டுப் பணிந்து திவ்வியபாலகனைப் பாடுவோமாக! என்றார்.

## குச்சிப்பெட்டிப் பாவனை

அமெரிக்க ஐக்கியதேசத்திலே வருடந்தோறும் 1,250 கோடி தீக்குச்சிப் பெட்டிகள் செய்யப்படுகின்றன. அதனால் அமெரிக்கர் ஒவ்வொருவரும் வருடம் ஒன்றுக்கு 143 குச்சிப்பெட்டிகள்வீதம் பாவிக்கிறார்கள் என்பது தெளிவாகின்றது. அத்தேசத்திலே செய்யப்படுகின்ற குச்சிப்பெட்டிகளில் நூற்றுக்குத் 90 வீதமும் கடைக்காரராலே வாடிக்கைகாரருக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. அதனால்தான் அமெரிக்கர்ஒவ்வொருவரும் வருடம் ஒன்றுக்குக் குச்சிப்பெட்டிகளுக்கென 32 சதமேசெலவுசெய்கிறார்கள்.

## அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்



சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்

### நன்றியறிந்த ஸ்தோத்திரங்களும் மன்றாட்டங்களும்

நம்வோட்டா:— கோடியற்புதராகிய அர்ச். அந்தோனியாரே, அர்ச். சூசையப்பரே! உங்களுடையமன்றாட்டினால் எனது காரியங்கள் அனுகூலமாகிவிட்டன. நன்றியாக ஏழைகளின் அப்பத்துக்குக் காணிக்கை ரூபா 2 அனுப்பியிருக்கிறேன்.

D. M. பிரான்சீஸ்

ஏழாலை: பரிசுத்த பாத்திமாமாதா, கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியார், அர்ச். சூசையப்பர், அர்ச். சவேரியார், அர்ச். சின்னத்திரேசம்மாள் ஆகிய இவர்களது மன்றாட்டத்தினால் குழந்தை யேசுநாதர்எனதுவேண்டுதலைக் கேட்டுப் பரீட்சையில் சித்தியடையச் செய்தார். அவர்களின் நாமங்கள் புகழப்படுவதாக. நேர்த்திப்படி காணிக்கையுடன் இதைப் பிரசுரிக்கின்றேன்.

M. திரேசா தவமணி

### கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

நீர்கொழும்பு: மேரி லோறு பெர்னாந்து 3-00 — மஸ்கேலியா: எம். பஸ்ரியாம்பிள்ளை 2-00 — நம்வொட்டா: டி. எம். பிரான்சீஸ் 2-00 — சிங்கப்பூர்: எம். மரியாம்பிள்ளை 5-00—முல்லைத்தீவு: பி. ஜே. சிறில் 3-00—மஸ்கேலியா: பி. கபிரிகேல் 1-50 — கண்டி: எஸ். சந்தனம் 5-00 — மொனருகல: கே. எம். சந்தனம் 2-50— உடப்புசலாவை: எஸ். எம். யோசேப்பு 10-00—சுன்னாகம்: எஸ். மரியதாஸ் 2-00 —யாழ்ப்பாணம்: பி. ஜி. பொன்னையா 2-00 — கொழும்பு: ரி. இரத்தினசாமி 10-00 — பண்டத்தரிப்பு: பி. எம். வேதநாயகம் 20-00—அலியாவத்தை: பி. காசியம்மா 2-00 — உடப்புசலாவை: மிசெஸ் எஸ். வி. பீற்றர் 3-00 — மலாயா: எஸ். எம். யோசேப் 14-80—புத்தளம்: பிரும் எல். லீயோ 2-00 — யாழ்ப்பாணம்: மிசெஸ் அந்திரேயாஸ் 5-00—முருங்கன்: எல். அருளம்மா லேனு 2-00 — கல்கமுவா: எஸ். மரியாம்பிள்ளை 1-50 — மலாயா: ஜே. சவிரிமுத்து 20-00 — டொன்கொற்றுவா: எஸ். எஸ். எவ். 3-00 — அம்பிற்றியா: மோசேஸ் டானியல் 2-00 — நெடுந்தீவு: சீமான் யோசேப்பு 37-00—அம்பிற்றியா: மிஸ் பிரான்சீஸ்கா 5-00 — சிங்கப்பூர்: ஓர் உபகாரி 5-00 — கேகாலை: டபிள்யூ. ஜோ. குரூஸ் 5-00 — மடுக்கலை: எஸ். யுவக்கீம் 2-00 — சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 10-00—முந்தல்: எம். அந்தோணிப்பிள்ளை 5-00 — எட்டியாந்தோட்டை: எம். ஆர். எஸ். டேவிற் இராசையா 2-00—காக்காப்பள்ளி: ஆர். எஸ். ஆர். காசிஐயா 5-00 — கம்பளை: மிசெஸ் சேவியர் 3-00 — கோலை: ஏ. சுவக்கீம் 5-00 — மஸ்கேலியா அந்தோணியம்மாள் 2-00— அக்கரபற்றன: எச். ஆர். சில்வானுஸ் 2-50 —கொற்றகல: டி. எஸ். பெறேரு 3-00 — சூராவத்தை: ஜெறேமியாஸ் பிலோமினு 5-00, ஆர். ரோசம்மா 3-00 — முள்ளிக்குளம்: சந்தியா வரவணிக்கா 3-00 — வதுளை: பி. எவ். சூசைப்பிள்ளை 1-00—கேகாலை: ஜி. எஸ். சின்னத்துரை 1-00 — மிருசுவில்: எஸ். நீற்று 2-00 — நம்வொட்டா: எம். எவ். யுவக்கீம் 1-00, எவ். எம். செபமாலை 1-00, டி. எம். பிரான்சீஸ் 2-00 — கொழும்பு: ஜே. யோசேப்பு 1-00, எஸ். எம். யோசேப்பு 3-00 — மஸ்கேலியா: பி. கபிரிகேல் 1-00 — வட்டகொட: ஏ. வேலாங்கண்ணி 2-00—உடப்புசலாவை: எஸ். எம். யோசேப்பு: 10-00.

| | |
|---|---|
| The Director,<br>St. Joseph's Conference.<br>Bishop's House,<br>JAFFNA. | சென் வின்சென்ற் டீ போல்சபைத்தலைவர்<br>மேற்றிராசன மாளிகை<br>யாழ்ப்பாணம். |

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, January 24 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org